தினமணி

## நீலகிரி பால் கூட்டுறவு நிறுவன புனரமைப்புக்கு விரைவில் அனுமதி: சரத் பவார்

நீலகிரி பால் கூட்டுறவு நிறுவனத்தைப் புனரமைக்கும் திட்டத்துக்கு விரைவில் அனுமதி வழங்கப்படும் என்று மத்திய வேளாண் துறை அமைச்சர் சரத் பவார் தெரிவித்துள்ளார்.

திட்டத்துக்கு அனுமதி கோரி ஆ. ராசா எம்.பி., கடந்த மாதம் எழுதிய கடிதத்துக்கு, இம்மாதம் 7-ம் தேதி அனுப்பிய பதில் கடிதத்தில் சரத் பவார் இதைத் தெரிவித்துள்ளார். "நீலகிரி பால் கூட்டுறவு நிறுவனத்தைப் புனரமைக்கும் திட்டத்துக்கு அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. 12-வது திட்டத்தின் கீழ் பரிசீலனை செய்து விரைவில் அனுமதி வழங்கப்படும்' என்று சரத் பவார் கூறியுள்ளார்.

இந்தத் திட்டத்துக்கு, மத்திய தொகுப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 7.17 கோடி நிதி வழங்க வேண்டும் என்று தேசிய பால் வளர்ச்சிக் கழகம், மத்திய கால்நடை வளர்ச்சி மற்றும் பால் வளத் துறைக்கு நீலகிரி மாவட்ட திமுக செயலரும், குன்னூர் எம்.எல்.ஏ-வுமான கா. ராமச்சந்திரன் விண்ணப்பித்திருந்தார்.

விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை எடுக்க உதவுமாறு ராசாவிடம் அவர் கோரியிருந்தார்.

அதையடுத்து சரத் பவாருக்கு ராசா கடிதம் எழுதினார் என்று ராசாவின் தில்லி அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## நாடாளுமன்ற முற்றுகை: தமிழக விவசாயிகள் பங்கேற்பு

மத்திய அரசின் விவசாய கொள்கைகளைக் கண்டித்து திங்கள்கிழமை அகில இந்திய விவசாயிகள் சங்கத்தினர் நாடாளுமன்ற முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டனர். செவ்வாய்க்கிழமையும் தங்கள் போராட்டம் தொடரும் என்று விவசாயிகள் கூறியுள்ளனர்.

திங்கள்கிழமையன்று, ஜந்தர் மந்தரில் போராட்டக்காரர்கள் தடுத்து நிறுத்தப்பட்டதால் விவசாயிகள் அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதில் தமிழகம் உள்பட பல்வேறு மாநில விவசாயிகள் கலந்துகொண்டனர்.

தமிழக விவசாயிகள் சங்கத் தலைவர் செல்லமுத்து கூறுகையில், "எரிவாயு குழாய் புதைக்கும் பணிக்கு விவசாய நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்யக்கூடாது;

பி.டி. ரக விதைகளை அனுமதிக்கக்கூடாது; நதிகளை தேசிய மயமாக்க வேண்டும்; அரசு கையகப்படுத்தும் விவசாய நிலங்களுக்கு வெளிச்சந்தை மதிப்பில் இழப்பீடு தர வேண்டும்

என்பவை உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தியும், மத்திய பட்ஜெட்டில் வேளாண் துறைக்குப் போதிய நிதி ஒதுக்காததைக் கண்டித்தும் போராட்டத்தில் ஈடுபட்டோம்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கப் பொதுச் செயலாளர் திருநாவுக்கரசு, பிரசாரக் குழுத் தலைவர் குப்புசாமி, பொருளாளர் பாலசுப்பிரமணியன், மகளிர், அகில இந்திய ஒருங்கிணைப்பாளர் நல்லா கவுண்டர், மகளிர் அணித் தலைவி ராஜஸ்ரீகா உள்பட கோவை, ஈரோடு, திருப்பூர், கடலூர், திண்டுக்கல், கரூர், நாமக்கல், திருவண்ணாமலை மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் போராட்டத்தில் கலந்துகொண்டனர்' என்று கூறினார்.

### குறைதீர் கூட்டத்தில் விவசாயிகள் புகார்

காஞ்சிபுரம் மாவட்டத்தில், அரசின் நெல் கொள்முதல் மையங்கள் செயல்படவில்லை, இதனால் நெல்லுக்கு உரிய விலை கிடைக்கவில்லை என்றும் விவசாயிகள் புகார் தெரிவித்தனர்.

விவசாயிகள் குறைதீர்க் கூட்டம், காஞ்சிபுரம் ஆட்சியர் அலுவலக வளாகத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் சம்பத்குமார் தலைமை வகித்தார். உத்தரமேரூர் சட்டப்பேரவை உறுப்பினர் வாலாஜாபாத் கணேசன், வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் வரதராஜுலு மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட முதுகரையைச் சேர்ந்த சிவலிங்கம் உள்ளிட்ட பல விவசாயிகள் தெரிவித்த புகார்:

காஞ்சிபுரம் மாவட்டத்தில் கடந்த ஆண்டு 27 நேரடி நெல் கொள்முதல் மையங்கள் செயல்பட்டன. ஆனால் இந்த ஆண்டு அக்கொள்முதல் மையங்கள் எங்கே என்று தெரியவில்லை.

இந்த ஆண்டு, சம்பந்தம் இல்லாத இடங்களில் புதிதாக கொள்முதல் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இதனால் தனியாரிடம் நெல்லை விற்கும் அவலம் ஏற்பட்டுள்ளது.

ஒரு கிலோ மோட்டா ரக நெல்லுக்கு ரூ. 13 என்றும், சன்னம் ரக நெல்லுக்கு ரூ. 13.50 என்றும் தமிழக அரசு நெல்லுக்கு கொள்முதல் விலை நிர்ணயம் செய்துள்ளது. ஆனால் தனியார் நெல் மண்டிகள் ஒரு மூட்டை (80 கிலோ) நெல்லுக்கு அதிகபட்சம் ரூ. 800 கூட தருவதில்லை. அதாவது கிலோவுக்கு அதிகபட்சமாக ரூ. 10 கூட கிடைப்பதில்லை.

ஆனால் வெளிமார்க்கெட்டில் அரிசி விலை கிலோ ரூ. 45 முதல் ரூ. 50 வரை விற்பனை செய்யப்படுகிறது. ஒரு மூட்டை (80 கிலோ) நெல்லுக்கு 40 கிலோ அரிசி தாராளமாக கிடைக்கும். அப்படி இருக்கையில் விவசாயிகளின் அடிவயிற்றில் அடிப்பது ஏன் என்று விவசாயிகள் ஆவேசத்துடன் கூறினர். விவசாயிகளின் சில புகாருக்கு மட்டும் அதிகாரிகள் பதிலளித்தனர்.

விவசாயிகள் ஏமாற்றம்: வழக்கமாக ஆட்சியர் லி. சித்ரசேனன் தலைமையில் நடக்கும் விவசாயிகள் குறைதீர்க் கூட்டம், முறையாக குறைந்தது 3 மணி நேரம் வரை நடைபெறும். ஆனால் திங்கள்கிழமை ஆட்சியர் இல்லாததால், மாவட்ட வருவாய் அலுவலர் தலைமையில் நடந்த இக்கூட்டம் 1 மணி நேரத்துக்கு முன்பாகவே முடிந்துவிட்டது.

மேலும் விவசாயிகள் கூறும் புகார்களுக்கு உரிய பதிலும் அளிக்கப்படவில்லை. ஏற்கெனவே கடந்த வெள்ளிக்கிழமை நடக்க வேண்டிய இக்கூட்டம் திங்கள்கிழமைக்கு தள்ளிவைக்கப்பட்டது. திங்கள்கிழமையும், முறையாக நடைபெறாததால், விவசாயிகள் பலர் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

## 22-ல் விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம்

வரும் மார்ச் 22-ல் மாவட்ட விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதுகுறித்து திங்கள்கிழமை மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவராவ் வெளியிட்ட செய்திக்குறிப்பு: மாவட்ட விவசாயிகளின் மாதாந்திர குறைதீர்வு நாள் கூட்டம் மார்ச் 22-ல் (வெள்ளிக்கிழமை) காலை 11 மணியளவில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்களில் ஆட்சியர் கொ.வீரராகவராவ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் வேளாண்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, மீன்வளத்துறை, கால்நடைத்துறை உள்ளிட்ட விவசாயம் சார்ந்த அனைத்துத் துறை அதிகாரிகளும் பங்கேற்று விவசாயிகளின் பிரச்னைகளுக்குத் தீர்வு காணவுள்ளனர்.

எனவே இம்மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் தவறாமல் இக்கூட்டத்தில் பங்கேற்று பயன்பெறலாம்.

## வறட்சி நிவாரணம் வழங்கக் கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

தேனியில் விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும்,

பயிர் கடனை ரத்து செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி மாவட்ட விவசாயிகள் சங்கம் சார்பில் திங்கள்கிழமை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாவட்டத் தலைவர் எம்.பாண்டியன் தலைமை வகித்தார். செயலர் கே.பிரபாகரன், வாழை உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் ஆர்.நாராயணசாமி, அல்லிநகரம் விவசாயிகள் பாதுகாப்பு சங்கத் தலைவர் வி.அழகர்சாமி, கிராமக் கமிட்டித் தலைவர் கோவிந்தசாமி, லட்சுமிபுரம் விவசாயிகள் நலச் சங்க பொருளாளர் பரசுராம் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தேனி மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டும், பயிர் கடன்களை முழுமையாக ரத்து செய்ய வேண்டும், கரும்பு விவசாயிகளுக்கு

கரும்பு வெட்டுக் கூலி, போக்குவரத்துச் செலவு ஆகியவற்றை ஆலை நிர்வாகம் ஏற்றுக் கொண்டு டன் ஒன்றுக்கு ரூ.4,000 வழங்க வேண்டும், வன விலங்குகளால் பயிர் சேதம் ஏற்படுவதைத் தடுக்க வேண்டும், சொட்டுநீர் பாசன மானியத்தை விவசாயிகளுக்கு நேரடியாக வழங்க வேண்டும், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துவதற்கு தேவையான இடங்களில் தடுப்பணைகள் கட்ட வேண்டும், விவசாயிகள் போராட்டத்தில் உயிரிழந்தவர்கள் குடும்பத்துக்கு பென்சன் வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

### மரங்களை வெட்ட தடை விதிக்க வலியுறுத்தல்

வால்பாறை பகுதியில் வறட்சி நிலவுவதால் எஸ்டேட் பகுதியில் உள்ள மரங்களை வெட்ட தடை விதிக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வால்பாறை பகுதியில் தட்பவெப்ப நிலை கடந்த சில மாதங்களாகவே மாறி காணப்படுகிறது. அதிக வெயில் நிலவுவதால் வெப்பம் அதிகரித்து சில எஸ்டேட் பகுதிகளில் தேயிலை கருகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இந்த வெப்பத்தினால் பல்வேறு எஸ்டேட் வனப்பகுதிகளில் காட்டுத்தீ பரவி செடிó, கொடிகள் அழிந்துவிட்டன.

வால்பாறையில் இருந்து பொள்ளாச்சி செல்லும் சாலையின் இரு புறங்களிலும் பசுமையாக இருந்த மரங்கள் சமீபகாலமாக காய்ந்து போய் மொட்டையாக காட்சியளிக்கின்றன.

வால்பாறை பகுதியில் மழை குறைந்ததே இந்த சூழ்நிலைக்கு முக்கியக் காரணம். இதுபோன்ற தட்பவெப்ப நிலை மாற்றம், கடந்த காலங்களில் இருந்தது இல்லை என்று இப்பகுதியினர் கூறுகின்றனர்.

இந்நிலையில் எஸ்டேட் பகுதியில் உள்ள சவுக்கு, இ-கிராண்டிஸ் போன்ற மரங்களை வெட்டி எடுத்துச் செல்வது வழக்கம்போல் நடைபெற்று வருகிறது.

மரம் வெட்டிய இடத்தில் மீண்டும் மரம் வளர்க்க வேண்டும் என்ற விதிமுறைகளை கடந்த காலங்களில் எஸ்டேட் நிர்வாகத்தினர் சரியாகப் பின்பற்றி வந்ததால் வனப்பகுதியில் உள்ள மரங்களின் எண்ணிக்கை குறையாமல் பாதுகாக்கப்பட்டது. ஆனால் தற்போது அதுபோல் பின்பற்றப்படுவதில்லை என்று கூறப்படுகிறது. இதனால் எஸ்டேட் பகுதியில் உள்ள மரங்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் குறைந்து, வனப்பகுதியின் பரப்பளவும் குறைந்து வறட்சி நிலவுவதால், வனவலிலங்குகள் இரையை தேடி வனத்தை விட்டு வெளியே வந்து பொதுமக்களைத் தாக்கும் சூழநிலை ஏற்பட்டுள்ளது.

எனவே வால்பாறை பகுதியில் மரங்களை வெட்ட முழுமையாக தடை விதிக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இது தொடர்பாக மாவட்ட ஆட்சியரிடம் வலியுறுத்த இருப்பதாகவும் தெரிவித்தனர்.

### வேளாண் உபகரணங்கள் வழங்குவதில் தாமதம் ஏன்

தருமபுரி வன்முறைச் சம்பவம் காரணமாக, மூக்கனூர் ஊராட்சியில் பயனாளிகளுக்கு வேளாண் உபகரணங்கள் வழங்குவதில் தாமதம் ஏற்பட்டதாக தருமபுரி மாவட்ட திட்டக் குழுக் கூட்டத்தில் ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் சி.க.வீரணன் தெரிவித்தார்.

தருமபுரி மாவட்ட திட்டக் குழுக் கூட்டம் மாவட்ட ஊராட்சி மன்றக் கூட்டத்தில் திங்கள்கிழமை நடைபெற்றது.

கூட்டத்திற்கு, அதன் தலைவர் டி.ஆர்.அன்பழகன் தலைமை வகித்தார்.

கூட்டத்தில், ஊரக வளர்ச்சித் துறை, வேளாண்மைத் துறை, வேளாண் பொறியியல் துறை, வனத் துறை உள்ளிட்ட 15 துறைகளின் சார்பில் 2011-ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை மேற்கொள்ளப்பட்ட திட்டப் பணிகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது.

சமூகப் பொருளாதாரத் திட்டத்தில் செயல்படுத்தப்படும் பணிகள் குறித்து மாவட்ட ஊரக வளர்சி முகமைத் திட்ட இயக்குநர் சி.க.வீரணன் பேசினார். மேலும், தருமபுரி வன்முறைச் சம்பவத்தால், மூக்கனூர் கிராமத்தில் பயனாளிகளுக்கு வேளாண் உபகரணங்கள் வழங்கப்படாமல் தாமதம் ஏற்பட்டதாக தெரிவித்த அவர், மாவட்டத்தில் 100 அரசுப் பள்ளிகளில் குடிநீர் வசதிக்காக, தலா ரூ.1.5 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், 32 பள்ளிகளில் இந்தப் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், மீதமுள்ள 68 பள்ளிகளில் பணிகள் விரைந்து முடிக்க ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

கூட்டத்தில், மாவட்ட திட்டப் பிரிவு அலுவலர் (பொறுப்பு) மொ.பெரியசாமி, உதவி வனப் பாதுகாவலர் வரதராஜன், மண் வள பாதுகாப்புத் திட்ட அலுவலர் கே.ராஜேந்திரன், வேளாண்மைத் துறை இணை இயக்குநர் பொ.மனோகரன், நகர்மன்றத் தலைவர் ஜெ.சுமதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### விவசாய சங்கத்தினர் பேரணி, ஆர்ப்பாட்டம்

திருச்சி மாவட்டம், முசிறியில் தமிழக விவசாயிகள் சங்கத்தினர் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி திங்கள்கிழமை பேரணி மற்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அனைத்து விவசாயிகளுக்கும் பாகுபாடில்லாமல் வறட்சி நிவாரணத் தொகை வழங்க வேண்டும், விவசாயிகளின் வங்கிக் கடன்களை ரத்து செய்ய வேண்டும், பால் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும், கால்நடைகளுக்கு மானிய விலையில் தீவனங்களை வழங்க வேண்டும்

போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.முன்னதாக, முசிறி புறவழிச் சாலையில் பேரணியைத் தொடங்கிய விவசாய சங்கத்தினர் முக்கிய சாலைகள் வழியாக சென்று கோட்டாட்சியர் அலுவலகத்தை அடைந்தனர். தொடர்ந்து அங்கு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு தமிழக விவசாய சங்கத்தின் மாவட்டத் தலைவர் சின்னத்துரை தலைமை வகித்தார். சங்கத்தின் மாநிலச் செயலர் ராஜா சிதம்பரம், மாவட்டச் செயலர் கணேசன், கரூர் மாவட்டச் செயலர் முருகேசன் ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினர். நூற்றுக்கும் மேற்பட்ட விவசாயிகள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

### மேட்டூர் அணை நீர்மட்டம்: 28.53 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 28.53 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 233 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 400 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

### மானியத்தில் பண்ணைக் குட்டை அமைக்க விண்ணப்பிக்கலாம்

திருவாரூர் மாவட்டத்தில் 50 சதவீத மானியத்தில் பண்ணைக் குட்டை அமைக்க விரும்புவோர் விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் சி. நடராசன் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் பண்ணைக்குட்டை அமைக்க தமிழக அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. நீர்ப்பற்றாக்குறை காலங்களில் விவசாயத்துக்கு நீரைப் பயன்படுத்தும் வகையிலும், இதில் மீன்களை வளர்த்து கூடுதல் வருமானம் ஈட்டவும் அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இதில் பயனடைய விரும்பும் மாவட்ட ஊரக வளர்ச்சித் துறை மூலம் தேர்வு செய்யப்பட்ட பண்ணைக் குட்டை விவசாயிகள் தங்களது விண்ணப்பங்களை விவசாய நில விவரங்களுடன் மார்ச் 31-ம் தேதிக்குள் மாவட்ட ஆட்சியருக்கு அளிக்க வேண்டும்.

ஒரு பண்ணைக் குட்டைக்கு மீன்குஞ்சு வளர்ப்புக்கு 50 சதவீதம் மானியமாக ரூ. 30,000, இதேபோல் மீன் வளர்க்க ரூ. 17,500 மானியமாக வழங்கப்படுகிறது.

### வறட்சிப் பகுதிகளை அமைச்சர்கள் குழு முழுமையாகப் பார்வையிடவில்லை

தூத்துக்குடி மாவட்ட வறட்சிப் பகுதிகளை அமைச்சர்கள் குழு முழுமையாகப் பார்வையிடவில்லை என அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் எம்எல்ஏ குற்றஞ்சாட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: தாமிரவருணி பாசனத்தின் மூலம் மருதூர் மேலக்கால், கீழக்கால், ஸ்ரீவைகுண்டம் வடகால், தென்கால் ஆகியவற்றில், இருபோக சாகுபடி நடந்து

வருகிறது. இந்தாண்டு பருவமழை பொய்த்து விட்டதாலும் அணைகளிலிருந்து தண்ணீர் திறந்து விடாததாலும் ஒரு போகம் கூட விவசாயம் நடைபெறவில்லை.

இந்நிலையில் கடந்த 15.11.12 முதல் 31.3.13 வரை 137 நாள்களுக்கு பழந்தொழி சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விட்டு, விவசாயிகள் சாகுபடி செய்ய அரசு உத்தரவாதம் வழங்கியது. ஆனால் 61 நாள்கள் மட்டுமே தண்ணீர் திறந்து விடப்பட்டது. இது விவசாயத்துக்கு போதுமானதாக இல்லாததால் பயிர்கள் கருகிப் போயின. இதனால் விவசாயிகள் பெருமளவு பாதிக்கப்பட்டனர்.

இதனால் ஏக்கருக்கு ரூ. 22 ஆயிரம் செலவு செய்து நஷ்டப்பட்டு வேதனையில் உள்ளனர். இந்நிலையில் தமிழக அரசு தூத்துக்குடி மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்தது. இதையடுத்து, இம்மாவட்டத்தில் வறட்சிப் பகுதியை பார்வையிட மார்ச் 17-ந் தேதி வந்த அமைச்சர்கள் குழு, குறிப்பிட்ட சில வறட்சிப் பகுதிகளை மட்டும் பார்த்து விட்டுச் சென்று விட்டனர்.

மாவட்டத்தின் தென்பகுதியில் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களை அந்தக் குழு பார்வையிடாமலேயே சென்றது விவசாயிகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

எனவே, அரசு தூத்துக்குடி மாவட்டத்தில் அனைத்து விவசாய நிலங்களையும் முழுமையாக பார்வையிட்டு, ஆய்வு செய்து விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ. 25 ஆயிரம் இழப்பீடு வழங்கி, விவசாயிகளின் வாழ்வாதாரத்தைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், தற்போது அணைகளிலுள்ள நீரை முன்கார் சாகுபடிக்கு திறந்து விடுவதற்கு அரசு உத்தரவாதம் வழங்கவேண்டும் என்றார் அவர்.

## வாழை நார் பிரித்தெடுக்கும் இயந்திரம்: தூத்துக்குடி மாணவர்கள் கண்டுபிடிப்பு

மின்சாரம் இல்லாமல், வாழை மரத்தில் இருந்து நாரை தனியாகப் பிரித்தெடுக்கும் இயந்திரத்தை தூத்துக்குடியைச் சேர்ந்த மாணவர்கள் கண்டுபிடித்துள்ளனர்.

தூத்துக்குடியில் உள்ள அண்ணா பல்கலைக்கழக பொறியியல் கல்லூரி 4-ம் ஆண்டு மாணவர்களான ராம்குமார், வசந்தகுமார், ரவிகுமார், வினோத்குமார் ஆகியோர் புதிதாக வாழை நார் பிரித்தெடுக்கும் இயந்திரத்தை கண்டுபிடித்துள்ளனர்.

இந்த நவீன இயந்திரம், அறுவடைக்குப் பின், வாழை மரத்தின் நார்களைப் பிரிக்க, மின்சாரத்தின் உதவியில்லாமல் இயங்கக் கூடியதாகும். இந்த இயந்திரம் வாழை மட்டையிலிருந்து, வாழை நாரை எளிதாகப் பிரிக்கிறது.

இதுகுறித்து மாணவர்கள் கூறியதாவது: வாழைத்தார் அறுவடைக்குப் பின் வாழை மரத்தை எரிப்பதால், காற்று மாசுபடுகிறது. இதனை தவிர்க்கும் வகையில், வாழை மட்டையில் இருந்து நார் பிரித்தெடுக்கும் இயந்திரத்தை கண்டுபிடித்துள்ளோம். இந்த இயந்திரத்தின் மூலம் மணிக்கு மூன்று முதல் 5 கிலோ வாழை நாரைப் பிரித்தெடுக்க முடியும்.

ராஜா பொறியியல் கல்லூரி வளாகத்தில் விரைவில் நடைபெற உள்ள கண்டுபிடிப்புகளுக்கான போட்டிக்கு இந்த இயந்திரம் தேர்வு செய்யப்பட்டுள்ளது என்றனர்.

### நாடாளுமன்ற முற்றுகை: தமிழக விவசாயிகள் பங்கேற்பு

மத்திய அரசின் விவசாய கொள்கைகளைக் கண்டித்து திங்கள்கிழமை அகில இந்திய விவசாயிகள் சங்கத்தினர் நாடாளுமன்ற முற்றுகைப் போராட்டத்தில் ஈடுபட்டனர். செவ்வாய்க்கிழமையும் தங்கள் போராட்டம் தொடரும் என்று விவசாயிகள் கூறியுள்ளனர்.

திங்கள்கிழமையன்று, ஜந்தர் மந்தரில் போராட்டக்காரர்கள் தடுத்து நிறுத்தப்பட்டதால் விவசாயிகள் அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதில் தமிழகம் உள்பட பல்வேறு மாநில விவசாயிகள் கலந்துகொண்டனர்.

தமிழக விவசாயிகள் சங்கத் தலைவர் செல்லமுத்து கூறுகையில், "எரிவாயு குழாய் புதைக்கும் பணிக்கு விவசாய நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்யக்கூடாது;

பி.டி. ரக விதைகளை அனுமதிக்கக்கூடாது; நதிகளை தேசிய மயமாக்க வேண்டும்; அரசு கையகப்படுத்தும் விவசாய நிலங்களுக்கு வெளிச்சந்தை மதிப்பில் இழப்பீடு தர வேண்டும் என்பவை உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தியும், மத்திய பட்ஜெட்டில் வேளாண் துறைக்குப் போதிய நிதி ஒதுக்காததைக் கண்டித்தும் போராட்டத்தில் ஈடுபட்டோம்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கப் பொதுச் செயலாளர் திருநாவுக்கரசு, பிரசாரக் குழுத் தலைவர் குப்புசாமி, பொருளாளர் பாலசுப்பிரமணியன், மகளிர், அகில இந்திய ஒருங்கிணைப்பாளர் நல்லா கவுண்டர், மகளிர் அணித் தலைவி ராஜரீகா உள்பட கோவை, ஈரோடு, திருப்பூர், கடலூர், திண்டுக்கல், கரூர், நாமக்கல், திருவண்ணாமலை மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் போராட்டத்தில் கலந்துகொண்டனர்' என்று கூறினார்.

### நீலகிரி பால் கூட்டுறவு நிறுவன புனரமைப்புக்கு விரைவில் அனுமதி

நீலகிரி பால் கூட்டுறவு நிறுவனத்தைப் புனரமைக்கும் திட்டத்துக்கு விரைவில் அனுமதி வழங்கப்படும் என்று மத்திய வேளாண் துறை அமைச்சர் சரத் பவார் தெரிவித்துள்ளார்.

திட்டத்துக்கு அனுமதி கோரி ஆ. ராசா எம்.பி., கடந்த மாதம் எழுதிய கடிதத்துக்கு, இம்மாதம் 7-ம் தேதி அனுப்பிய பதில் கடிதத்தில் சரத் பவார் இதைத் தெரிவித்துள்ளார். "நீலகிரி பால் கூட்டுறவு நிறுவனத்தைப் புனரமைக்கும் திட்டத்துக்கு அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. 12-

வது திட்டத்தின் கீழ் பரிசீலனை செய்து விரைவில் அனுமதி வழங்கப்படும்' என்று சரத் பவார் கூறியுள்ளார்.

இந்தத் திட்டத்துக்கு, மத்திய தொகுப்புத் திட்டத்தின் கீழ் ரூ. 7.17 கோடி நிதி வழங்க வேண்டும் என்று தேசிய பால் வளர்ச்சிக் கழகம், மத்திய கால்நடை வளர்ச்சி மற்றும் பால் வளத் துறைக்கு நீலகிரி மாவட்ட திமுக செயலரும், குன்னூர் எம்.எல்.ஏ-வுமான கா. ராமச்சந்திரன் விண்ணப்பித்திருந்தார்.

விண்ணப்பத்தின் மீது நடவடிக்கை எடுக்க உதவுமாறு ராசாவிடம் அவர் கோரியிருந்தார்.

அதையடுத்து சரத் பவாருக்கு ராசா கடிதம் எழுதினார் என்று ராசாவின் தில்லி அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# தினமலர்

**கரிம விவசாய கருத்தரங்கு**

திருப்போரூர்:காஞ்சிபுரம் மாவட்டம் கரிம(இயற்கை) விவசாய கூட்டமைப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்கம் சார்பில், தண்டரை கிராமத்தில், கரிம விவசாய கருத்தரங்கு நடந்தது.கருத்தரங்கிற்கு, சியாமளா தலைமை தாங்கினார். கரிம விவசாய கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சோலையப்பன் பேசியதாவது:வேளாண் சாகுபடியில் ரசாயன உரங்களை, அதிக அளவு பயன்படுத்துவதன் மூலம், நிலம் உப்புத்தன்மையாக மாறுகிறது. ஒரு காலக்கட்டத்திற்கு பிறகு, நிலம் தனது வளத் தன்மையை முற்றிலுமாக இழந்து விடுகிறது. இதனால், விளைச்சல் குறைவதோடு, விவசாயிகளின் வருமானமும், வாழ்வாதாரமும் பாதிக்கப்படுகிறது.இன்றைய சூழலில், விவசாயிகள் வேளாண் சாகுபடியில், ரசாயன உரங்களை தவிர்த்து, எளிதில் கிடைக்கக்கூடிய, இயற்கை உரங்களான உயிர் உரங்களை பயன்படுத்தினால், அதிக மகசூல் பெற முடியும். இம்முறையில் உற்பத்தி செய்யப்படும் விளைபொருட்களை, சந்தையிடுவதற்கான வாய்ப்புகள் தற்போது அதிகரித்துள்ளது.இவ்வாறு, அவர் பேசினார்.வேளாண் விஞ்ஞானி மணிமாறன், விவசாயத்தில் இடுபொருள் சிக்கனம் மற்றும் புதிய தொழில் நுட்பங்கள் குறித்து விளக்கினார். சுற்றுச்சூழல் பாதுகாப்பு, நீர் மேலாண்மை, ஆகியவற்றுடன் இணைந்த, இயற்கை விவசாய வழிமுறைகளை, ஜெயச்சந்திரன் எடுத்துஉரைத்தார்.கூட்டமைப்பின் செயலர் தனபால் வரவேற்றார். துணைத் தலைவர் சுப்பு நன்றி கூறினார்.

## விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

வேலூர்: வறட்சி நிவாரணம், கடன் நிவாரணம் வழங்கக் கோரி தமிழக விவசாயிகள் சங்கம் சார்பில், வேலூர் கலெக்டர் அலுவலகம் முன் நேற்று ஆர்ப்பாட்டம் நடந்தது.மாவட்ட செயலாளர் தனபால் தலைமை வகித்தார். மாவட்ட தலைவர் கண்ணைய நாயுடு துவங்கி வைத்தார். நிர்வாகிகள் நீதி, தனசேகர், வர்ண குமார், வெங்கடேசன், பார்த்தீபன், வடிவேல், கிருஷ்ணன், ராமச்சந்திரன், கிருஷ்ண மூர்த்தி கலந்து கொண்டனர்.

## புதிய தொழில் நுட்பத்தில்பயிர் சாகுபடி கருத்தரங்கு

விழுப்புரம்:சத்திய சாயி சேவா சமிதி சார்பில் பயிர் சாகுபடியில் புதிய தொழில் நுட்பம் குறித்த கருத்தரங்கு விழுப்புரத்தில் நடந்தது. விழுப்புரம் காவலர் சமுதாயக் கூடத்தில் நடந்த நிகழ்ச்சிக்கு மாநில தலைவர் வரதன் தலைமை தாங்கினார். மாவட்ட தலைவர் சரவணன் வரவேற்றார். மாநில ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீசாய் வசந்த் வேளாண் வளர்ச்சிக் குறித்து பேசினார்.மாவட்ட வேளாண் அலுவலர் சுப்ரமணியன், திருந்திய நெல் சாகுபடி குறித்தும், விதை மேலாண்மை குறித்து வேலாயுதம், விதை உற்பத்தி குறித்து சிவராசன், நடராஜன் ஆகியோர் விளக்கி பேசினர். கருத்தரங்கில் விவசாயிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## வேர்க்கடலை விலை குறைந்ததால்விவசாயிகள் திடீர் மறியல்

திண்டிவனம்:திண்டிவனம் மார்க்கெட் கமிட்டியில் ஒரு கோடியே 15 லட்சம் ரூபாய் செலவில் சேமிப்பு கிடங்கு அமைக்கும் பணி துவங்கியது.விழுப்புரம் மாவட்ட வேளாண் விற்பனை சங்கம் சார்பில் திண்டிவனத்தில் உள்ள மார்க்கெட் கமிட்டி வளாகத்தில் ஒரு கோடியே 15 லட்சம் ரூபாய் செலவில் சேமிப்பு கிடங்கு அமைக்கப்படுகிறது. மொத்தம் 20 ஆயிரம் மெட்ரிக் டன் அளவுள்ள தானியங்கள் இருப்பு வைக் கும் அளவில் இந்த கட்டிடம் கட்டப்படுகிறது.இதற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று காலை நடந்தது. அரிதாஸ் எம்.எல்.ஏ., அடிக்கல் நாட்டினார். மாவட்ட இளைஞர் மற்றும் இளம்பெண்கள் பாசறை செயலாளர் ஜெயப்பிரகாஷ், புலவர் நல்லியக்கோடன், சிங்கனூர் காளிதாஸ், பாஸ்கர், ஒப்பந்தகாரர்கள் சத்திய நாராயணன், ஆனந்த் பங்@கற்றனர்.

## தினமும் வரும் யானைகளிடம் இருந்து... வனத்துறையினரிடம் விவசாயிகள் குமுறல்

சத்தியமங்கலம்: "காட்டு யானைகளிடம் இருந்து எங்களையும், எங்கள் பயிர்களையும் காப்பாற்றுங்கள்,' என வனத்துறை அதிகாரிகளிடம் விவசாயிகள் குமுறினர்.சத்திமங்கலத்தில் இருந்து மேட்டுப்பாளையம் செல்லும் ரோட்டில் உள்ளது நால்ரோடு, கோடேபாளையம், அம்மாபாளையம், ஆலாம்பாளையம், சொலவனூர் உள்ளிட்ட கிராமங்கள். இக்கிராமங்கள் பவானிசாகர் வனப்பகுதியை ஒட்டியவாறு உள்ளது. இக்கிராமங்களில் கடந்த இரண்டு ஆண்டுகளாக காட்டு யானைகள் கூட்டம், கூட்டமாக புகுந்து விவசாய பயிர்களை நாசம் செய்வது மட்டுமின்றி, கிராம மக்களையும் மிரட்டி வருகிறது.இதனால் இப்பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். கடந்த சில மாதங்களுக்கு முன் விவசாயிகள் சாலை மறியல் போராட்டம் நடத்தினர். இதையடுத்து பல்வேறு அதிகாரிகளிடம் மனு கொடுத்தனர். ஆனால் எவ்வித பலனும் இல்லாததால், மீண்டும் போராட்டம் நடத்த திட்டமிட்டனர்.இதனால் விவசாயிகளை நேரில் சந்தித்து பேச வனத்துறையினர் முடிவு செய்தனர். இதன்படி நால்ரோடு அருகே ஆஞ்சநேயர் கோவில் மண்டபத்தில் விவசாயிகள் மற்றும் வனத்துறை அதிகாரிகள் கொண்ட ஆலோசனை கூட்டம் நடந்தது. பவானிசாகர் எம்.எல்.ஏ., சுந்தரம் தலைமை வகித்தார். ஈரோடு மண்டல வனக்காப்பாளர் வெங்கடேசன், சத்திமங்கலம் மாவட்ட வனஅதிகாரி ராஜ்குமார், விவசாயிகளின் பிரதிநிதி கிரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.இதுவரை யானைகள் மற்றும் காட்டுப்பன்றிகளால் நாசம் செய்யப்பட்ட பயிர்களுக்காக, விவசாயிகளுக்கு எவ்வித இழப்பீடும் கொடுக்கவில்லை. மேலும் யானைகள் எங்கள் கிராமங்களில் இருந்து கொண்டு அவ்வப்போது வனப்பகுதிக்கு சென்று வருகிறது. இதனால் எங்கள் வாழ்வு கேள்விக்குறியாக உள்ளதாக குமுறினர். பொதுமக்கள், விவசாயிகள், விவசாயத்தை காப்பாற்ற நடவடிக்கை வேண்டுமென, விவசாயிகள் குமுறினர்.மண்டல வனக்காப்பாளர் வெங்கடேசன் கூறியதாவது:ஏற்கனவே மேட்டுப்பாளையம் ரோட்டில் வெட்டப்பட்டுள்ள அகழியை பெரியதாக்கி, யானைகள் தாண்டி வர முடியாத அளவு விரிவு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். வனவிலங்குகளால் நாசம் செய்யப்பட்ட பயிர்களுக்கு இழப்பீடு வழங்க ஏற்பாடு செய்யப்படும்.புதிய தொழில் நுட்பங்களை பயன்படுத்தி சென்சார் கருவிகளை வைத்து யானைகள் வருவதை கண்டறிந்து, உடனே அவைகளை வனப்பகுதிக்குள் விரட்டுவது குறித்து ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது, என்றார்.* நல்ல மழை பெய்யும் வரை அல்லது வனத்துக்குள் தண்ணீர் கிடைத்து, மரம், செடிகள் செழிக்கும் வரை, வனத்துக்குள் உள்ள குட்டைகளில் தண்ணீர் நிரப்ப ஏற்பாடு செய்ய வேண்டும்.* குறிப்பிட்ட பாதை வழியாகவே யானை உள்ளிட்ட விலங்குகள் வருவதால், அப்பகுதியில் தற்காலிக பணியாளர்களை நியமித்து

இரவில் கண்காணிக்கலாம்.* கிராம வனக்குழு போன்றோருக்கு, வனவிலங்குகளை விரட்டுவதற்கு தேவையான பயிற்சி, கருவிகள், பட்டாசு போன்றவைகளை வழங்க வேண்டும்.* இதையும் மீறி வன விலங்குகள் பயிர்களை சேதப்படுத்தினால் அல்லது ஆடு, மாடு, மனித உயிர்களுக்கு ஆபத்தை விளைவித்தால் உடனடியாக நிவாரணத்துக்கு ஏற்பாடு செய்ய வேண்டும், என விவசாயிகள் கருத்து தெரிவித்தனர்.

**தேயிலை ஏல விலையில் ஏற்றம்: ஆர்தோடக்ஸ் ரகத்துக்கு கிராக்கி**

குன்னூர்:குன்னூர் தேயிலை மையத்தில் தேயிலை கிலோவுக்கு 2 ரூபாய் ஏற்றம் காணப்பட்டது.குன்னூர் தேயிலை வர்த்தகர்கள் சங்க ஏல மையத்தில், நடப்பாண்டின் 11வது ஏலம் கடந்த 14 மற்றும் 15ம் தேதிகளில் நடந்தது. இதில், மொத்தம் 8.60 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இதில் 6.46 லட்சம் கிலோ இலை ரகமும், 2.14 லட்சம் கிலோ டஸ்ட் ரகமும் அடங்கும். மொத்தம் 8.60 லட்சம் கிலோ தேயிலை தூளில் 95 சதவீதம் விற்பனையானது. இந்த வாரம் கிலோ ஒன்றுக்கு 2 ரூபாய் உயர்வு காணப்பட்டது. சி.டி.சி., ரகத்துக்கு அதிகபட்சமாக கிராஸ் ஹில் எஸ்டேட் தேயிலைக்க 182 ரூபாயும், ஆர்தோடக்ஸ் ரகத்துக்கு அதிகபட்சமாக சாம்ராஜ் எஸ்டேட்க்கு 260 ரூபாயும் விலை கிடைத்தது.சராசரியாக சாதாரண ரகத்துக்கு 84 ரூபாயிலிருந்து 87 ரூபாய் வரையிலும், உயர் ரகம் கிலோ ஒன்றுக்கு 120 ரூபாய் முதல் 160 ரூபாய் விலை கிடைத்தது.

டஸ்ட் ரகத்தில் சாதாரண ரகத்துக்கு 98 ரூபாயிலிருந்து 100 ரூபாய் வரையிலும், உயர் ரகத்துக்கு 120 ரூபாய் முதல் 160 ரூபாய் வரை விலை கிடைத்தது. வரும் 21 மற்றும் 22ம் தேதிகளில் நடக்கும் 12வது ஏலத்துக்கு மொத்தம் 8.49 லட்சம் கிலோ தேயிலை விற்பனைக்கு தயாராக உள்ளது. இதில், 6.11 லட்சம் கிலோ இலை ரகமும், 2.38 லட்சம் கிலோ டஸ்ட் ரகமும் அடங்கும்.

**மானிய விலை நாற்றுக்கள்**

கூடலூர்:விவசாய நாற்றுகளை 50 சதவீதம் மானியத்தில் பெற்று கொள்ள விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.கூடலூர் தோட்டக்கலைதுறை உதவி இயக்குனர் உமாராணி வெளியிட்டுள்ள அறிக்கை :கூடலூர் விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த தோட்டக்கலை அபிவிருத்தி திட்டத்தில் சிறு குறு விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானிய விலையில் தேயிலை, காப்பி, குறுமிளகு, கிராம்பு, ஜாதிக்காய், பாக்கு நாற்றுகள் வழங்கப்படுகிறது. இந்த செடிகளை தேவாலா தோட்டகலை பண்ணையிலிருந்து பெறலாம்.மலைப்பகுதி மேம்பாட்டு திட்டத்தில் சிறு குறு விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானிய விலையில், பீன்ஸ் விதைகள் வழங்கப்படுகிறது.

மேலும், 25 சதவீம் மானியத்தில் பவர் டில்லர் (விசை உழுவை), ஆயில் என்ஜின், கைதெளிப்பான், விவசாய கருவிகளும் கூடலூர் வேளாண்மை விரிவாக்க மையத்தில் வழங்கப்பட்டு வருகிறது.தோட்டக்கலை துறையில் வழங்கப்படும் இடுபொருட்களை பெற விருப்பம் உள்ள விவசாயிகள், வேளாண்மை விரிவாக்க மையத்தில் விபரம் பெற்று பயனடையலாம்'. இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## தேயிலை செடிகளுக்கு "ஸ்பிரிங்லர்' தண்ணீர்

கூடலூர்:கூடலூர் பகுதியில் வெயிலின் தாக்கத்திலிருந்து தேயிலை செடிகளை பாதுகாத்து, மகசூல் பெற "ஸ்பிரிங்லர்' மூலம் தண்ணீர் பாய்ச்சப்படுகிறது.கூடலூர் பகுதியில் தற்போது வறட்சியின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இதன் காரணமாக, தெயிலை செடிகளில் மகசூல் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது.தேயிலைக்கு நல்ல விலை கிடைத்து வரும் நிலையில், அதன் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். வெயிலின் தாக்கத்திலிருந்து தேயிலை செடிகளை பாதுகாக்கவும், மகசூல் பெறும் வகையில், "ஸ்பிரிங்லர்' மூலம் தேயிலை செடிகளுக்கு தண்ணீர் பாய்ச்சி வருகின்றனர்.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம்

பெரம்பலூர்: "பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் தரேஷ்அஹமது வெளியிட்ட அறிக்கை:பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 21ம் தேதி காலை 10.30 மணிக்கு மாவட்ட கலெக்டர் தரேஷ்அஹமது தலைமையில் நடக்கிறது. விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் தங்களது விவசாய பணிகள் தொடர்பான பாசன ஏரி, வாய்க்கால்கள் தூர்வாருதல், வங்கி கடனுதவி, உரம், வேளாண்மை இயந்திரங்கள், விவசாயிகள் மேம்பாட்டிற்கான நலத்திட்டங்கள் பற்றிய முறையீடுகள் பற்றி விவாதிக்கப்படும். எனவே இக்கூட்டத்தில் விவசாயிகள் கலந்து கொண்டு குறைகளை தெரிவித்து பயன்பெறலாம். கூட்டத்தில் அனைத்து அரசுத்துறை அலுவலர்களும் கலந்து கொண்டு விவசாயிகளின் கோரிக்கை மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்க உள்ளனர். எனவே பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டு பயன்பெறலாம்.இவ்வாறு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**மதகு அமைத்து அரசு நிதியை வீணடிக்க திட்டம்: தஞ்சை கலெக்டரிடம் விவசாயிகள் புகார் மனு**

தஞ்சாவூர்: "தஞ்சையில், பாசனத்துக்கு தண்ணீர் சேமிக்க வழியில்லாத பகுதியில், தேவையின்றி அரசு பணத்தை வீணடித்து மதகு அமைக்கவும், விவசாயிகள் நலனை பாதிக்கவும் பொதுப்பணித்துறை மற்றும் பூதலூர் பஞ்., யூனியன் நிர்வாகம் சார்பில் எடுத்து வரும் நடவடிக்கையை தடுக்க வேண்டும்' என, கலெக்டரிடம் விவசாயிகள் புகார் மனு கொடுத்தனர்.தஞ்சை கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் பாஸ்கரன் தலைமையில் குறைதீர் கூட்டம் நடந்தது. இதில், தஞ்சை தாலுகா வெண்டையம்பட்டி அருகே, சொரக்குடிப்பட்டி, காளியம்மன் கோவில் தெருவை சேர்ந்த விவசாயிகள் தமிழரசன், மதியழகன், ராஜேந்திரன், கம்யூ., தஞ்சை ஒன்றிய செயலாளர் கண்ணன், மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் மனோகரன், ஜீவக்குமார் உள்பட நிர்வாகிகள் வந்தனர்.கலெக்டர் பாஸ்கரனிடம் கொடுத்த புகார் மனு:தஞ்சை மாவட்டம், தஞ்சை தாலுகா சொரக்குடிப்பட்டி பகுதியில், கடந்த 60 ஆண்டுக்கு மேலாக 61 குடும்பத்தினர் நெல் சாகுபடி உள்பட விவசாயம் செய்து வருகிறோம். இதற்காக, பூதலூர் பஞ்., யூனியனில் சாகுபடி வயலுக்கு உரிய நிலவரியை முறைப்படி கட்டி வருகிறோம்.பூதலூர் பஞ்., யூனியன் நிதி ஒரு லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்பில், இப்பகுதியில் பாசனத்துக்காக மதகு ஒன்றை கட்டுவதாக, பொதுப்பணித்துறையினர் அறிவித்துள்ளனர்.இப்பகுதியில், ஏற்கனவே போதுமான அளவு பாசன நீர் வசதி உள்ளதால் விவசாயம் நடந்து வருகிறது. மதகு உள்ளிட்டவை கட்டினாலும் அதன்மூலம் வாய்க்கால் வடிகால் மூலம் தண்ணீர் சேமிக்கும் வகையில் நில அமைப்பு தாழ்வாக இல்லை. ஆனாலும் கூட, தேவையின்றி பஞ்., யூனியன் நிதியை வீணடிக்கும் வகையில், பொதுப்பணித்துறையினர் சுய நலனுக்காகவும் மதகு அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது.இங்கு, மதகு அமைப்பதன் மூலமாக எவ்வித பயனும் விவசாயத்துக்கு கிடைக்காது. மாறாக, விவசாயிகள் நிலங்களை இழந்து, பாசனம் செய்ய முடியாமலும், ஜீவாதாரமும் பாதிக்கப்படும் சூழ்நிலை ஏற்படும். இதைக் கருத்தில் கொண்டும், அரசு நிதியை வீணாகாமல் தடுக்கவும் மதகு அமைப்பதை தடுத்து, அந்நிதியை வேறு பணிகளுக்கு திருப்பி விட்டு, 61 விவசாயிகளின் குடும்பங்களை காப்பாற்ற வேண்டும். பூதலூர் பஞ்., யூனியன், பொதுப்பணித்துறையினர் கூட்டு நடவடிக்கையால் விவசாய பாசனம் பாதிப்பதை தடுக்க வேண்டும்.இவ்வாறு, கூறியுள்ளனர்.

**பஞ்சு விலை குறைந்ததால் இலவம் விவசாயிகள் கவலை**

வருஷநாடு:வருஷநாடு, வாலிப்பாறை பகுதிகளில் இலவம் பஞ்சு விலை குறைந்து வருவதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். வருஷநாடு, வாலிப்பாறை, முருக்கோடை, தும்மக்குண்டு, முத்தலாம்பாறை, மூலக்கடை, சிங்கராஜபுரம்,பொன்னன்படுகை, காமராஜபுரம், காந்திக்கிராமம் பகுதிகளில் பத்தாயிரம் ஏக்கரில் இலவம் மரங்கள் சாகுபடி செய்து வருகின்றனர். ஆண்டுக்கு ஒரு முறை மட்டுமே காய்ப்புக்கு வரும். கடந்த சில தினங்களாக பெய்த சாரல் மழையால், இலவம் மரத்திலுள்ள பூ மற்றும் பிஞ்சுகள் உதிர்ந்து விட்டதால் இந்தாண்டு உற்பத்தி குறைந்துள்ளது. கடந்தாண்டு, இலவம் பஞ்சுவிலை கிலோ 65 ரூபாய் வரை விற்பனை செய்யப்பட்டது. தற்போது, உற்பத்தி குறைந்த போதிலும் விலை 42 ரூபாய்க்கும் குறைவாக விற்பனை செய்யப்படுவதால் விவசாயிகள் கண்ணீர் சிந்தி வருகின்றனர்.இந்த பகுதி விவசாயிகளின் நலன் கருதி, இலவம் பஞ்சினை அரசு கொள்முதல் செய்ய மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயி சடையன் கூறியதாவது: விலைவசாசி உயர்வால் கூலித்தொழிலாளர்கள் நாள் ஒன்றிற்கு 400 ரூபாய் சம்பளம் கேட்கின்றனர். தற்போது பஞ்சு உற்பத்தி குறைந்த போதிலும்,விலை நாளுக்கு நாள் குறைந்து வருவதால், இலவம் பஞ்சு விவசாயத்தில் எந்த ஒரு பலனும் இல்லை. விவசாயிகள் கண்ணீர் சிந்தும் நிலைக்க தள்ளப்பட்டுள்ளனர்,என்றார்.

**பதனீர் கொள்முதல் விலையை அரசு உயர்த்தாததால்... ஏமாற்றம் அழிந்து வரும் தொழிலை பாதுகாக்க விவசாயிகள் விருப்பம்**

ஸ்ரீவில்லிபுத்தூர்:பதனீர் கொள்முதல் விலையை, இந்தாண்டும் தமிழக அரசு உயர்த்தாததால் பனை விவசாயிகள் ஏமாற்றமடைந்துள்ளனர்.ஸ்ரீவில்லிபுத்தூர், மம்சாபுரம், திருவண்ணாமலை, செண்பகதோப்பு உட்பட சுற்று வட்டார பகுதிகளில் 50 ஆயிரத்திற்கும் அதிகமான பனை மரங்கள் உள்ளன. இதை நம்பி ஆயிரத்திற்கும் மேற்பட்ட பனை தொழிலாளர்கள் வாழ்க்கை நடத்தி வருகின்றனர். பனை மரங்களிலிருந்து ஆண்டு தோறும் ஜனவரி15 முதல் ஆகஸ்ட் மாதம் வரை பதனீர் எடுக்கப்படும். இங்கிருந்து தினமும் 50 ஆயிரம் லிட்டருக்கும் அதிகமாக பதனீர் கிடைக்கும். இந்த பதனீரை ஸ்ரீவில்லிபுத்தூர் பனை பொருள் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்குவர். சிலர் சொந்தமாக பதனீரை காய்ச்சி, கருப்பட்டியாக்கி தனியாருக்கும், கூட்டுறவு சங்கங்களுக்கும் விற்பனை செய்வர். இந்த கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தியாளர்களிடம் வாங்கப்படும் பதனீர் பதப்படுத்தப்பட்டு விருதுநகர், மதுரை, தூத்துக்குடி மாவட்ட பகுதிகளுக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. கடந்தாண்டு ஸ்ரீவில்லிபுத்தூர் சுற்று வட்டார பகுதிகளில் சரி வர மழை பெய்யவில்லை. ஜனவரி மாத கடைசியில் துவங்க வேண்டிய

பதனீர் உற்பத்தி, தற்போது மார்ச் மாதம் துவங்கிய பின்பும் சரிவர துவங்காத நிலையில் உள்ளது. தற்போது மிக குறைவான பதனீரே உற்பத்தியாகி வருகிறது. இந்நிலையில் பதனீரின் கொள்முதல் விலை லிட்டருக்கு 10 ரூபாயாக உள்ளது. இன்று வரை விலையை அரசு உயர்த்தாதது, பனை தொழிலாளர்களுக்கு மிகுந்த ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. பனை தொழிலாளி மாடசாமி கூறுகையில்,"" ஏற்கனவே தற்போது பனை ஏறுவதற்கு மிகவும் குறைவான எண்ணிக்கையிலேயே ஆட்கள் உள்ளனர். பனை தொழில் அழிவை நோக்கி சென்று கொண்டிருக்கிறது. தற்போது பனை ஏறுபவர்களின் கூலி, உட்பட அனைத்து செலவுகளும் அதிகரித்துள்ளது. அரசு பனை விவசாயிகளின் நலன் கருதி பதனீரின் கொள்முதல் விலையை அதிகரித்து, அழிந்து வரும் இத்தொழிலை பாதுகாக்க வேண்டும்," என்றார்.

**ஏலத்தில் பருத்தி விலை சரிவு**

வாராந்திர பருத்தி ஏலத்தில், விலை சரிந்தது.

அன்னூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில், நேற்று நடந்த வாராந்திர பருத்தி ஏலத்தில், 146 விவசாயிகள் பங்கேற்றனர். ஏலத்தில் 902 மூட்டை பருத்தி விற்பனையானது. "போல்காட்' முதல் ரக பருத்தி குறைந்தபட்சமாக 4,000 ரூபாய் முதல், அதிகபட்சமாக 4,210 வரை விற்றது. இரண்டாம் ரக பருத்தி 3,750 ரூபாய் முதல், 3,990 வரை விற்றது. பருத்தி விலை கடந்த வாரத்தை விட குறைந்துள்ளது, என, விற்பனைக்கூட கண்காணிப்பாளர் ரமேஷ்குமார் தெரிவித்தார்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

**“பாக்கு விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்குங்கள்” மத்திய மந்திரி சரத்பவாருக்கு ஜெகதீஷ் ஷெட்டர் கடிதம்**

பெங்களூர்

பாக்கு விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கக் கோரி மத்திய மந்திரி சரத்பவாருக்கு முதல்–மந்திரி ஜெகதீஷ் ஷெட்டர் கடிதம் எழுதியுள்ளார். இது தொடர்பாக முதல்–மந்திரி ஜெகதீஷ் ஷெட்டர்,

மத்திய வேளாண்மை மந்திரி சரத்பவாருக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார். அதில் கூறி இருப்பதாவது:–

பல்வேறு துயரங்கள்

வட கர்நாடகத்தில் பாக்கு விவசாயம் அதிகமாக மேற்கொள்ளப்படுகிறது. வறட்சி உள்ளிட்ட பிரச்சினைகளால் பாக்கு விவசாயிகள் பல்வேறு துயரங்களை சந்தித்து வருகிறார்கள். இந்த விவசாயிகளுக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்று கோரி கடந்த 2009–ம் ஆண்டு மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்தோம். அதன் பேரில் டாக்டர் கோரக்சிங் தலைமையிலான மத்திய குழுவினர் இங்கு வந்து நேரடி ஆய்வு செய்தனர். அந்த குழு அதே ஆண்டு டிசம்பர் மாதம் அறிக்கையை மத்திய அரசிடம் தாக்கல் செய்தது. அதில், பாக்கு விளைச்சலை அதிகரிக்க சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று கூறியுள்ளது.

ரூ.365 கோடி கடன்

இது தொடர்பாக கர்நாடக ஐகோர்ட்டில் கடந்த ஆண்டு தொடரப்பட்ட பொதுநல வழக்கில் மத்திய குழு வழங்கிய அறிக்கையை அமல்படுத்த நீதிபதிகள் உத்தரவிட்டனர். 75 கூட்டுறவு சங்கங்கள் மூலம் சுமார் 50 ஆயிரம் பாக்கு விவசாயிகள் ரூ.365 கோடி கடன் வாங்கியுள்ளனர். அவர்களால் அந்த கடனை திருப்பி செலுத்த இயலவில்லை. பருவமழை பொய்த்தது, வறட்சி, அழிவு பூச்சிகளின் தாக்குதல் போன்ற பிரச்சினைகளால் பாக்கு விவசாயிகள் பெரும் இழப்பை சந்தித்து உள்ளனர். இந்த பிரச்சினையில் தாங்கள் தனிப்பட்ட முறையில் தலையிட்டு பாதிக்கப்பட்ட பாக்கு விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அந்த கடிதத்தில் கூறப்பட்டுள்ளது.

## தென் பெண்ணை–பாலாறு இணைப்பு திட்டத்தை விரைந்து செயல்படுத்த வேண்டும் விவசாயிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டடம்

வேலூர்

தென்பெண்ணை–பாலாறு இணைப்பு திட்டத்தை விரைந்து செயல்படுத்திட வேண்டும் என்கிற கோரிக்கையை வலியுறுத்தி விவசாயிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம் செய்தனர்.

ஆர்ப்பாட்டம்

தமிழக விவசாயிகள் சங்கத்தின் வேலூர் மாவட்ட செயலாளர் தனபால் தலைமையில் நேற்று விவசாயிகள் வேலூர் கலெக்டர் அலுவலகம் அருகே ஆர்ப்பாட்டம் செய்தனர். ஆர்ப்பாட்டத்தை மாவட்ட தலைவர் கண்ணைய நாயுடு தொடங்கி வைத்தார்.

அவர்கள் கோரிக்கை பற்றிய விவரம் வருமாறு:–

தமிழ்நாட்டில் வறட்சியால் பெரிதும் பாதிக்கப்பட்ட மாவட்டம் வேலூர் மாவட்டமாகும். பல ஆண்டுகளாக பருவ மழை பொய்த்துவிட்ட காரணத்தால் நிலத்தடி நீர் மட்டம் சுமார் 700 அடிக்கு கீழே போய்விட்டது. பாலாறும் வறண்டு விட்டது.

எனவே நிலத்தடி நீர் மட்டம் உயரவும், விவசாயத்தையும், விவசாயிகளையும் பாதுகாக்கவும் தென்பெண்ணை ஆற்று நீரை கிருஷ்ணகிரி அணையில் இருந்து செட்டேரி அணை வழியாக (கல்லாற்று வழி) பாலாற்றில் இணைக்க அரசை சங்கம் கேட்டுக்கொள்கிறது. இந்த திட்டத்தை விரைந்து செயல்படுத்திட அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுத்திட வேண்டும். இந்த திட்டம் நிறைவு பெறும் போது காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டமும் பயன் பெறும்.

தள்ளுபடி செய்ய வேண்டும்

வேலூர் மாவட்டத்தில் தொடர்ச்சியாக பல ஆண்டுகள் மழைபெய்யாத காரணத்தால், விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டது தெரிந்ததே. எனவே தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகள், நிலவள வங்கிகள் உள்ளிட்ட அனைத்து நிதி அமைப்புகளிலும் விவசாயிகள் பெற்ற அனைத்துவகையான கடன்களையும் அரசு தள்ளுபடி செய்திட வேண்டும்.

ஜப்தி என்ற பெயரில் விவசாயிகளிடம் பறித்துச்சென்ற டிராக்டர் மற்றும் பொருட்களை மீண்டும் விவசாயிகளிடமே வழங்கிட வேண்டும்.

விவசாயிகள் விளைவித்த கரும்புக்கான வெட்டுக்கூலியை ஆலையே ஏற்றுக்கொள்வதுடன், டன் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரம் வழங்கிட வேண்டும். அத்துடன் மற்ற பயிர்களுக்கு பாதிப்பின் அடிப்படையில் வறட்சி நிவாரணம் வழங்கிட வேண்டும், என்பன போன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி அவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். அப்போது அவர்கள் கோஷமும் போட்டனர்.

கோரிக்கையில் முக்கியத்துவம் குறித்து கிருஷ்ணன், ராமச்சந்திரன் மற்றும் நிர்வாகிகளான நீதி, தனசேகரி, வர்ணகுமார் உள்பட பலரும் பேசினார்கள்.

பின்னர் சங்கத்தின் முக்கிய நிர்வாகிகள் கலெக்டர் அலுவலகம் சென்று கலெக்டரை சந்தித்துகோரிக்கைகள் அடங்கிய மனுவை கொடுத்துவிட்டு கலைந்து சென்றனர்.

**தென்பெண்ணை ஆற்றுநீர் பிரச்சினை: விவசாயிகளின் நலன் காக்க தி.மு.க. சார்பில் ஆர்ப்பாட்டம் செங்குட்டுவன் எம்.எல்.ஏ. தகவல்**

ஓசூர்,

தென்பெண்ணை ஆற்றுநீர் பிரச்சினையில் விவசாயிகளின் நலன் காக்கும் வகையில் தி.மு.க. சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று செங்குட்டுவன் எம்.எல்.ஏ. தெரிவித்தார்.

தென்பெண்ணை ஆறு

ஓசூர் அருகே கர்நாடக எல்லையான தத்தனூரில் தென்பெண்ணை ஆற்று நீரை உறிஞ்சி லக்கூர் ஏரிக்கு திருப்பி விடப்படுகிறது. இதற்காக தத்தனூரில் வைக்கப்பட்டுள்ள பம்பிங் மையத்தை, கிருஷ்ணகிரி மாவட்ட தி.மு.க. செயலாளரும், வேப்பனப்பள்ளி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான டி.செங்குட்டுவன் நேற்று பார்வையிட்டார்.

பம்பிங்கிற்காக மோட்டார் வைக்கப்பட்டுள்ள இடம் மற்றும் லக்கூர் ஏரியை அவர் பார்வையிட்டார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:–

சட்டமன்றத்தில் பேசினேன்

தமிழகத்திற்கு வரும் தென்பெண்ணை ஆற்று நீரை திருப்பி லக்கூர் ஏரியை நிரப்ப கர்நாடகா பணிகளை மேற்கொண்டுள்ளது. இந்த பணிகள் கடந்த ஒரு வாரமாக நடக்கிறது. இதுவரை 50 எச்.பி. திறன் கொண்ட மோட்டாரை வைத்து தண்ணீர் உறிஞ்சி உள்ளார்கள். இனி 100 எச்.பி. திறன் கொண்ட மோட்டார் வைத்து உறிஞ்ச திட்டமிட்டுள்ளார்கள்.

முதலில் லக்கூர் ஏரியை நிரப்பி பின்னர் மாலூர் தாலுகாவில் உள்ள 130 சிறிய ஏரிகளை நிரப்ப அவர்கள் திட்டமிட்டுள்ளார்கள். இது பற்றி நான் முந்தைய சட்டமன்ற கூட்டத் தொடரிலேயே பேசினேன்.

தி.மு.க. சார்பில் ஆர்ப்பாட்டம்

1892–ம் ஆண்டைய ஒப்பந்தப்படி, ஒரு மாநிலத்திற்கு வரும் தண்ணீரை இவ்வாறு தெரியாமல் எடுக்க கூடாது. இதை மீறி இவ்வாறு கர்நாடகாவில் தண்ணீர் எடுக்கப்படுகிறது. அங்கு பணிகள் தொடங்கும் முன்பாகவே தமிழக அரசு தடுத்து இருக்க வேண்டும்.

இதனால் தமிழக விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே, தமிழக விவசாயிகளின் நலன் காக்கும் வகையிலும், அரசின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் தி.மு.க. தலைவர் கருணாநிதி, பொருளாளர் மு.க.ஸ்டாலின் ஆகியோரின் அனுமதி பெற்று கிருஷ்ணகிரி மாவட்ட தி.மு.க. சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும். விவசாயிகளின் நலனுக்காக தி.மு.க. தொடர்ந்து போராடும்.

இவ்வாறு செங்குட்டுவன் எம்.எல்.ஏ. கூறினார்.

அப்போது ஓசூர் நகர தி.மு.க. செயலாளர் விஜயகுமார், முன்னாள் எம்.எல்.ஏ. வெங்கடசாமி, முன்னாள் நகராட்சி தலைவர் என்.எஸ்.மாதேஸ்வரன் ஆகியோர் உடன் இருந்தனர்.

## விவசாயிகளை காப்பாற்ற எரிவாயு குழாய்களை நெடுஞ்சாலை ஓரமாக கொண்டுசெல்ல வேண்டும் வைகோ பேட்டி

சென்னிமலை

விவசாயிகளை காப்பாற்ற எரிவாயு குழாய்களை நெடுஞ்சாலை ஓரமாக கொண்டுசெல்லவேண்டும் என்று சென்னிமலையில் அளித்த பேட்டியில் வைகோ கூறினார்.

<u>விவசாய நிலங்கள் அழிப்பு</u>

மத்திய அரசின் "கெயில்" நிறுவனம் கொச்சியில் இருந்து தமிழகத்தில் உள்ள கோவை, திருப்பூர், ஈரோடு, நாமக்கல், சேலம், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய 7 மாவட்டங்கள் வழியாக பெங்களூருக்கு கொண்டு செல்கிறது. இதற்காக பல இடங்களில் விவசாய விளை நிலங்களில் உள்ள தென்னை மரங்கள், நன்செய், புஞ்சை பயிர்கள் மற்றும் கிணறுகள் ஆகியவை அழிக்கப்பட்டு வருகிறது.

இதைத்தொடர்ந்து விவசாய நிலங்களுக்கு அடியில் எரிவாயு குழாய் கொண்டு செல்வதற்கு எதிர்ப்பு தெரிவித்து பாதிக்கப்படும் விவசாயிகள் போராட்டங்களை நடத்தினார்கள்.

<u>கருத்து கேட்பு</u>

அதைத்தொடர்ந்து தமிழக முதல்–அமைச்சர் ஜெயலலிதாவின் உத்தரவின் பேரில் 7 மாவட்டங்களில் உள்ள விவசாயிகளை சென்னைக்கு வரவழைத்து தலைமை செயலாளர் ஷீலா பாலகிருஷ்ணன் கருத்துக்களை கேட்டார்.

அதன்பிறகு தற்காலிகமாக விவசாய நிலங்களுக்கு அடியில் குழி தோண்டுவது நிறுத்தி வைக்கப்பட்டது.

<u>விவசாயிகள் கண்ணீர்</u>

இந்நிலையில், ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ நேற்று சென்னிமலை அருகே முல்லைநாயக்கனூர், பெரியகாட்டுப்பாளையம், சிறுக்களஞ்சி ஆகிய பகுதிகளில் எரிவாயு குழாய் அமைக்க விவசாய நிலங்களுக்கு நடுவில் குழி தோண்டி இருப்பதை பார்வையிட்டார். பாதிக்கப்படும் விவசாயிகளை நேரில் சந்தித்தார்.

அப்போது விவசாயிகள் கண்ணீர் விட்டு அழுதனர். அவர்களுக்கு வைகோ ஆறுதல் கூறினார்.

<u>கேரளாவில்....</u>

அதைத்தொடர்ந்து வைகோ நிருபர்களிடம் பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:–

“மத்திய அரசின் கெயில் நிறுவனம் கேரளாவில் இருந்து மங்களூருக்கு எரிவாயு குழாய் அமைக்க முடிவு செய்யப்பட்ட போது கேரள விவசாயிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர்.

அதனால் அந்த திட்டத்தை நிறுத்தி விட்டு பெங்களூரில் இருந்து மங்களூருக்கு சித்திரகுடா நெடுஞ்சாலை வழியாக கொண்டு செல்ல இருக்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டில் விவசாய நிலங்களுக்கு அடியில் எரிவாயு குழாயை கொண்டு செல்ல முடிவு செய்துள்ளனர்.

<u>விவசாயிகளை காப்பாற்ற...</u>

விவசாய நிலங்கள் வழியாக கொண்டு செல்லாமல் நெடுஞ்சாலை வழியாக கொண்டு சென்றால் 13 கிலோ மீட்டர் மட்டுமே அதிக தூரம் ஆகிறது. பல இடங்களில் விவசாய நிலங்களின் நடு பகுதியில் குழி தோண்டியுள்ளனர்.

மீதி நிலத்தை வைத்துக்கொண்டு விவசாயம் செய்து வாழவும் முடியாது. விற்கவும் முடியாது. இந்த விவசாயிகளை காப்பாற்ற ஒரே வழி மாற்று திட்டமான நெடுஞ்சாலைகள் வழியாக கொண்டு செல்ல வேண்டும்.

<u>கருணை உள்ளத்தோடு</u>

சென்னை உயர்நீதி மன்றமும் விவசாயிகளிடம் கருத்து கேட்டுத்தான் திட்டம் செயல்படுத்த வேண்டும் என்றும், போலீசாரை வைத்து மிரட்டி செயல்படுத்த கூடாது என்றும் கூறியுள்ளது. தமிழக முதல்–அமைச்சர் ஜெயலலிதா விவசாயிகளின் கோரிக்கைகளை கருணை உள்ளத்தோடு பரிசீலித்து மாற்று திட்டமான நெடுஞ்சாலைகள் வழியாக கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்க வேண்டும்.

<u>சாதகமான முடிவு</u>

எங்களுக்கு சாதகமான முடிவு இல்லையென்றால் எங்கள் உயிர் போனாலும் நிலத்தை விடமாட்டோம் என விவசாயிகள் கூறுகின்றனர். அதனால் கட்சி பாகுபாடின்றி அறவழியில் போராடியாவது விவசாயிகளை காப்பாற்ற வேண்டும்“ என்றார்.

அப்போது கணேசமூர்த்தி எம்.பி, ம.தி.மு.க மாநில விவசாய பிரிவு இணை செயலாளர் சுப்பிரமணியம், ஒன்றிய செயலாளர் கலைவாணி தங்கமுத்து, நகர செயலாளர் மனோகரன், பாதிக்கப்படும் விவசாயிகள் உரிமை பாதுகாப்பு குழு ஒருங்கிணைப்பாளர் பொன்னையன் உட்பட பலர் இருந்தனர்.

## கோபி அருகே புஞ்சைத்துறையம்பாளையத்தில் நள்ளிரவில் தோட்டத்துக்குள் நுழையும் யானைகள் தீப்பந்தத்துடன் தூங்காமல் காவல் இருந்த விவசாயிகள்

ஈரோடு

கோபி அருகே புஞ்சைத்துறையம்பாளையத்தில் நள்ளிரவில் விவசாய தோட்டத்துக்குள் புகுந்து யானைகள் அட்டகாசம் செய்கின்றன. அதை தடுக்க விடிய விடிய தீப்பந்தத்துடன் விவசாயிகள் காவல் காக்கின்றனர்.

<u>வறண்டு கிடக்கும் வனப்பகுதி</u>

கோபிசெட்டிபாளையம் அருகே டி.என்.பாளையம் வனச்சரத்துக்கு உள்பட்டது புஞ்சைத்துறையம்பாளையம், தேன்கல்கரடு, நவக்கிணறு மாதையன் கோவில் வனப்பகுதிகள். இந்த வனப்பகுதிகளில் யானைகள், காட்டு எருமைகள், மான்கள், கரடிகள், சிறுத்தைப்புலிகள் உள்ளிட்ட வனவிலங்குகள் வசித்து வருகின்றன.

தற்போது கோடை காலம் புஞ்சைத்துறையம்பாளையம் வனப்பகுதி முழுமையாக வறண்டுக் கிடக்கிறது. மேலும், இயற்கையாக அமைக்கப்பட்டு உள்ள தடுப்பணைகளில் தண்ணீர் வற்றிக்

காணப்படுகிறது. எனவே, வனவிலங்குகளின் தாகத்தை தீர்ப்பதற்காக ரூ.5 லட்சம் செலவில் கட்டப்பட்ட செயற்கை வனக்குட்டையில் வனத்துறையினர் தண்ணீர் நிரப்பி வருகிறார்கள்.

யானைகள் அட்டகாசம்

வனப்பகுதியில் தீவனப் பற்றாக்குறை ஏற்பட்டு உள்ளதால் இரவு நேரங்களில் யானைகள் வனப்பகுதியை விட்டு அருகில் உள்ள விவசாய தோட்டங்களுக்குள் புகுந்து விடுகின்றன. புஞ்சைத்துறையம்பாளையம் பறையன் காட்டுத் தோட்டத்தை சேர்ந்தவர் முருகேசன். விவசாயி. இவர் அந்தப் பகுதியில் உள்ள ஒரு தோட்டத்தை குத்தகைக்கு எடுத்து விவசாயம் செய்து வருகிறார்.

இதில், 2 ஏக்கர் பரப்பளவில் கரும்பும், வாழையும் சாகுபடி செய்து உள்ளார். கரும்பு பயிர்கள் தற்போது முதிர்ச்சி அடைந்து வெட்டும் நிலையில் உள்ளது. இரவு நேரங்களில் யானைகள் அட்டகாசம் செய்வதால் முருகேசன் மற்றும் பக்கத்து தோட்டத்தை சேர்ந்த விவசாயிகள் தினமும் இரவு காவல் காத்து வருகின்றனர்.

தோட்டத்திற்குள் புகுந்தது

இந்தநிலையில் நேற்று அதிகாலை 4 மணியளவில் வனப்பகுதியில் இருந்து வெளியேறிய 4 யானைகள் முருகேசன் தோட்டத்தில் சாகுபடி செய்து இருந்த கரும்புத் தோட்டத்துக்குள் புகுந்தது. அதைப் பார்த்ததும் முருகேசன் மற்றும் பக்கத்து தோட்டத்தை சேர்ந்த விவசாயிகளும் தீப்பந்தம் கொளுத்தியும், பட்டாசு வெடித்தும், வினோத சத்தம் எழுப்பியும் யானைகளை விரட்டினார்கள்.

தீப்பந்த வெளிச்சத்தையும், பட்டாசு சத்தத்தையும் கேட்டு மிரண்டு போன யானைகள் முருகேசன் தோட்டத்தை விட்டு வெளியேறி, அருகில் இருந்த அர்ஜுணன் என்பவர் சாகுபடி செய்து இருந்த மக்காச்சோளம் தோட்டத்துக்குள் புகுந்தன. அப்போது காவலுக்கு படுத்து இருந்த அர்ஜுணனின் மகன் மகேஷ்குமார், யானைகளை பார்த்ததும் அதிர்ச்சி அடைந்தார்.

தீப்பந்தம் கொளுத்தி...

பிறகு, தீப்பந்தம் கொளுத்தி யானைகளை விரட்ட முயன்றார். அதனால் ஆவேசம் அடைந்த ஒரு யானை மகேஷ்குமாரை விரட்டிக் கொண்டு வந்தது. அதைத்தொடர்ந்து மகேஷ்குமார் மற்றும் அக்கம்பக்கத்து தோட்டத்தை சேர்ந்த விவசாயிகளும் ஒன்று சேர்ந்து பட்டாசு வெடித்தும், வினோத சத்தம் எழுப்பியும் யானைகளை வனப்பகுதிக்குள் விரட்டி அடித்தனர்.

சுமார் ஒரு மணி நேர போராட்டத்துக்கு பிறகு அதிகாலை 5 மணியளவில் யானைகள் வனப்பகுதிக்குள் சென்றன. இந்த சம்பவத்தில் ரூ.10 ஆயிரம் மதிப்புள்ள வாழைகள் மற்றும் கரும்புகள் சேதம் அடைந்தன. வனப்பகுதியை ஒட்டியுள்ள விவசாய தோட்டத்துக்குள் யானைகள் நுழைவதை தடுக்க அகழிகள் வெட்டப்பட்டு இருந்தும், அதை தாண்டிக் கொண்டு யானைகள் தோட்டத்துக்குள் புகுந்து விடுகின்றன.

விடிய விடிய காவல்

இதுகுறித்து அந்தப் பகுதியை சேர்ந்த விவசாயிகள் கூறியதாவது:–

வனப்பகுதியில் தீவனப் பற்றாக்குறை ஏற்பட்டு உள்ளதால், இரவு நேரங்களில் வனப்பகுதியை ஒட்டி யானைகள் வந்து விடுகின்றன. மேலும், வனக்குட்டையில் தண்ணீரை குடித்துக் கொண்டு, விவசாய தோட்டத்தை ஒட்டியே யானைகள் சுற்றித் திரிகின்றன. இருளத் தொடங்கியதும் தோட்டத்துக்குள் நுழைந்து விடுகின்றன.

யானைகளிடம் இருந்து பயிர்களை காப்பதற்காக டயர், விறகுகளை கொளுத்தி தீ வைத்தும், தீப்பந்தம் கொளுத்தியும் காவல் காக்க வேண்டி உள்ளது. வனத்துறையினர் சார்பில் உள்ள சோலார் பேட்டரிகள் பழுதடைந்து உள்ளதால் யானைகள் எளிதாக உள்ளே நுழைந்து விடுகின்றன. எனவே, விவசாய தோட்டத்துக்குள் யானைகள் நுழைவதை தடுக்க வனத்துறை அதிகாரிகள் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை: பவானிசாகர் அணை நீர்மட்டம் 7 அடி உயர்ந்தது விவசாயிகள் ஆறுதல்

ஈரோடு

நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மிதமான மழை பெய்து வருவதால், பவானிசாகர் அணை நீர் மட்டம் 7 அடி உயர்ந்துள்ளது. இதனால் விவசாயிகள் ஆறுதல் அடைந்து உள்ளனர்.

பவானிசாகர் அணை

தென்னிந்தியாவின் மிகப்பெரிய மண் அணை என்ற பெருமை கொண்ட பவானிசாகர் அணையின் மொத்த நீர்மட்ட உயரம் 120 அடியாகும். இதில் சகதி 15 அடி கழித்து நீர்மட்ட உயரம் 105 அடியாக கணக்கிடப்படுகிறது. அணையின் மொத்த நீர் கொள்ளவு 32 டி.எம்.சி. ஆகும்.

ஈரோடு மற்றும் கரூர் மாவட்டத்தின் ஒரு பகுதியை பசுமையாக வைத்துள்ள பவானிசாகர் அணை புஞ்சைபுளியம்பட்டி, சத்தியமங்கலம், கோபிசெட்டிபாளையம், பவானி உள்ளிட்ட நகராட்சி மற்றும் நுாற்றுக்கணக்கான பேரூராட்சி, ஊராட்சி பகுதிகளின் குடிநீர் பிரச்சனையை தீர்த்து வருகிறது.

<u>பாசன வசதி</u>

இது மட்டுமின்றி அணையின் இருந்து வெளிவரும் கீழ்பவானி வாய்க்கால் மூலம் 2 லட்சத்து 7 ஆயிரம் ஏக்கர் பாசன நிலங்களும், பவானி ஆற்றின் மூலம் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை மற்றும் காளியங்காரயன் பாசனப்பகுதியை சேர்ந்த 50 ஆயிரம் ஏக்கர் பாசனப்பகுதியும் வளம் பெறுகிறது.

பவானிசாகர் அணைக்கு நீலகிரி மலைப்பகுதியில் இருந்து வரும் பவானி ஆறும், கூடாலூர் மலைப்பகுதியில் இருந்து வரும் மோயாரும் நீர்வள ஆதாரங்களாக விளங்குகிறது.

<u>கடந்த ஆண்டு</u>

கடந்த ஆண்டு இதே நேரத்தில் பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 71.39 அடியாக இருந்தது. அணையின் நீர்மட்டம் 64 அடியாக இருந்தது. இதனால் கடந்த ஆண்டு வறட்சியின்போது குடிநீருக்கு எவ்வித பிரச்சனையும் இல்லாமல் பாசனத்திற்காகவும் பவானிசாகர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது.

ஆனால் தற்போது பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதியான நீலகிரி மலைப்பகுதியில் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளதால் அணைக்கு சொற்ப அளவு தண்ணீரே வந்தது. அதே சமயம் அரசு அவ்வப்போது பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிட்டதால் அணையின் நீர்மட்டம் தொடர்ந்து குறையத்தொடங்கியது.

<u>நீர்மட்டம் உயர்ந்தது</u>

இந்த நிலையில் கடந்த வாரம் மின் உற்பத்திக்காக பில்லுாிர் அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிட்டதாலும், நீலகிரி மலைப்பகுதியில் லேசாக மழை பெய்ததாலும் அணைக்கு வரும் தண்ணீர் அளவு சற்று அதிகரித்துள்ளது.

இதனால் கடந்த 10 நாட்களுக்கு முன் 33 அடியாக குறைந்த பவானிசாகர் அணையின் நீர்மட்டம் தற்போது 39.35 அடியாக உயர்ந்துள்ளது. அணையின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதால் ஈரோடு மாவட்ட விவசாயிகள் ஆறுதல் அடைந்துள்ளனர்.

## குன்னூர் ஏல மையத்தில் 95 சதவீத தேயிலை தூள் விற்பனை

குன்னூர்,

குன்னூர் ஏல மையத்தில் 95 சதவீத தேயிலை தூள் விற்பனையானது.

தேயிலை ஏலம்

குன்னூர் தேயிலை வர்த்தகர் அமைப்பின் சார்பில் வாரந்தோறும் வியாழன், வெள்ளி ஆகிய 2 நாட்கள் தேயிலை ஏலம் நடத்தப்படுகிறது. இந்த ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் கலந்து கொண்டு தேயிலை தூளை ஏலம் எடுக்கிறார்கள்.

விற்பனை எண் 11–க்கான ஏலம் கடந்த 14, 15 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. இந்த ஏலத்திற்கு மொத்தம் 8 லட்சத்து 60 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது. இதில், 6 லட்சத்து 46 ஆயிரம் கிலோ இலை ரகமாகவும், 2 லட்சத்து 14 ஆயிரம் கிலோ டஸ்ட் ரகமாகவும் இருந்தது.

95 சதவீத தேயிலை தூள் விற்பனை

இந்த ஏலத்தில் 95 சதவீத தேயிலை தூள் விற்பனை ஆனது. அனைத்து தேயிலை தூள் ரகங்களுக்கும் ரூ.2 விலை உயர்வு இருந்தது. சி.டி.சி. தேயிலை தூளின் உயர்ந்தபட்ச விலையாக 182 ரூபாயாக இருந்தது. ஆர்தோடக்ஸ் தேயிலை தூள் 260 ரூபாய் என்று உயர்ந்த பட்ச விலை யாக ஏலம் சென்றது.

சராசரி விலையாக இலை ரக தேயிலை தூளின் சாதாரண வகை 84 ரூபாயில் இருந்து 87 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 120 ரூபாயில் இருந்து 160 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது. டஸ்ட் ரக தேயிலை தூளின் சாதாரண வகை 98 ரூபாயில் இருந்து 100 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 120 ரூபாயில் இருந்து 160 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.

விற்பனை எண் 12–க்கான ஏலம் வருகிற 21, 22 ஆகிய தேதிகளில் நடக்கிறது. இந்த ஏலத்திற்கு மொத்தம் 8 லட்சத்து 49 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வருகிறது.

## எண்ணெய்பனை சாகுபடியில் வருவாய் அதிகம் விவசாயிகள் பயன்பெற வேளாண் அதிகாரி வேண்டுகோள்

திருக்கோவிலூர்,

எண்ணெய் பனை சாகுபடியில் வருவாய் அதிகமாக இருப்பதால் விவசாயிகள் பயன்பெற வேளாண் அதிகாரி வேண்டுகோள் விடுத் துள்ளார். திருக்கோவிலூரை அடுத் துள்ள முகையூர் ஒன்றியத்தில் உள்ள வேளாண்மை உதவி இயக்குனர் கென்னடி ஜெபக் குமார் விடுத்துள்ள செய் திக்குறிப்பில் கூறியிருப்ப தாவது:

எண்ணெய்பனை சாகுபடி

நாட்டின் சமையல் எண்ணை தேவையில் உள் நாட்டு உற்பத்தி போதுமான தாக இல்லாததால் ஆண்டுக்கு 50 முதல் 60 லட்சம் டன் சமையல் எண்ணை மலேசியா, இந்தோனேசியா போன்ற வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படு கின்றது. இதில் 60 சதவீதம் பாமாயில் இறக்குமதி செய்யப் படுகின்றது. எனவே நாட்டின் அன்னிய செலா வணியை மிச்சப்படுத்திட விவசாயிகள் தமிழக அரசின் சிறப்பு திட்டமான எண்ணெய்பனை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் எண்ணெய்பனை விவ சாயத்தில் ஈடுபட வேண்டும். இந்த சிறப்பு திட்டத் தினை பொறுத்தவரை நட்ட 3ம் ஆண்டு முதல் குறைந்தபட்சம் 30 லிருந்து 35 ஆண்டுகள் வரை காய்க்கும் தன்மை உடையது. மாதம் 2 முறை அறுவடை செய்திடலாம்.

சொட்டு நீர் பாசனம்

இதனால் விவசாயிகளுக்கு மாதந்தோறும் வருமானம் கிடைக்கின்றது. இன்னும் சொல்லப்போனால் ஒரு எக்டேரில் 6 ஆயிரம் முதல் 8 ஆயிரம் கிலோ பாமாயில் எண்ணை கிடைக்கிறது. மேலும் விவசாயிகளுக்கு அரசு பாமாயில் கன்றுகளை இலவசமாக வழங்குகின்றது.

இதில் முதலாம் ஆண்டு நடவு மானியமாக எக்டேருக்கு ரூ.6 ஆயிரம் மானியமாகவும், முதலாம் ஆண்டு ஊடுபயிர் மானியம் மற்றும் சொட்டு நீர் பாசனம் அமைத்திட எக்டேருக்கு ரூ.15 ஆயிரமும் அரசு வழங்குகின்றது. எனவே இதனை விவசாயிகள் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## அரியலூர் மாவட்டத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்

அரியலூர்

அரியலூர் மாவட்டத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் ரவிக்குமார் தலைமையில் நடைபெற்றது.

**விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்**

அரியலூர் மாவட்ட கலெக்டர் கூட்ட அரங்கில் வேளாண்மைத்துறையின் சார்பில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடை பெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட கலெக்டர் ரவிக் குமார் தலைமை தாங்கி பேசிய தாவது:–

நமது மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழை 954 மிமீ. 2012–ம் ஆண்டு 678 மிமீ மழை பெறப்பட்டுள்ளது. சராசரி மழையை விட 276 மிமீ குறைவாக பெறப் பட்டுள் ளது. இந்த ஆண்டு மார்ச் மாதம் 7.5 மி.மீ வரை மழை பெறப்பட்டுள்ளது.

**நெல் சாகுபடி**

நெல் சாகுபடி இயல்பான பரப்பு 25 ஆயிரம் எக்டர் ஆகும். கடந்த ஆண்டு 27 ஆயிரத்து 400 எக்டர் நெல் சாகுபடி செய்யப்பட்டது. இதுவரை 17 ஆயிரத்து 100 எக் டரில் சாகுபடி செய்யப் பட் டுள்ளது.

சிறுதானியங்கள் 16 ஆயி ரத்து 930 எக்டர் பரப்பிலும் பயிறுவகை பயிர்கள் 2 ஆயி ரத்து 900 எக்டரிலும் பருத்தி 8 ஆயிரத்து 100 எக்டரிலும் கரும்பு 8 ஆயிரத்து 15 எக்டரி லும் எண்ணெய் வித்து 10 ஆயி ரத்து 681 எக்டரிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

**தேவையான இருப்பு**

குறுவை பருவத்திற்கு ஏற்ற ஆடுதுறை 36, ஆடுதுறை 45 ஆகிய விதைகள் தேவையான அளவு இருப்பு உள்ளது. நன் செய் தரிசில் உளுந்து சாகுபடி செய்ய 5 டன் விதைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

உரங்கள் யூரியா 375 மெ.டன், டிஏபி 225 மெ.டன், பொட்டாஷ் 145 மெ.டன் மற்றும் கலப்பு உரங்கள் 395 மெ.டன் தேவையான அளவு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மற்றும் தனியார் விற்பனை மையங் களில் இருப்பு உள்ளது.

**குறைந்த நீர்**

வறட்சி காரணமாக நீண்ட கால வயதுடைய பயிர் சாகு படி செய்யமுடியாத நிலையில், இருக்கும் குறைந்த நீரை பயன் படுத்தி அதிக மகசூல் மற்றும் வருவாய் பெற்றிட குறைந்த கால வயதுடைய உளுந்து பயிர் பயிரிடலாம்.

உளுந்து பயறு உற்பத்தி அதிகரிக்க தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் தீவிர பயறு உற்பத்தியில் 300 எக்டர் அரியலூர் மாவட் டத்திற்கு ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது. இந்த

திட்டத்தில் எக்டருக்கு ரூ.4 ஆயிரத்து 800 மதிப்புள்ள இடுபொருட்கள் மானிய விலையில் வழங்கப் பட்டு வருகின்றது. தேவைப் படும் விவசாயிகள் அந்தந்த வட்டார வேளாண்மை விரி வாக்க மையங்களை தொடர்பு கொண்டு பயன்பெறலாம்.

இவ்வாறு அவர் பேசினார்.

**கலந்து கொண்டவர்கள்**

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் கருப்ப சாமி, இணை இயக்குநர் (வேளாண்மை) குணசேகரன், துணை இயக்குநர் (தோட்டக் கலைத்துறை) சுப்பையா, .உலகநாதன், செங்கமுத்து, .ஜெயசந்திரன், ராகவேந்திரன், பிச்சைபிள்ளை, அம்பேத் கார் வலியன், மணி ஆகிய விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் அனைத்து அரசுத்துறை அலு வலர்கள் பலர் கலந்து கொண் டனர்.

## பண்ணை குட்டையில் மீன் வளர்க்க விரும்புவோர் 31–ந் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும் கலெக்டர் தகவல்

கரூர்,

கரூர் மாவட்டத்தில் மானியத்தில் பண்ணை குட்டைகளில் மீன் வளர்க்க விரும்புவோர் வருகிற 31–ந் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும் என்று கலெக்டர் ஜெயந்தி தெரிவித்து உள் ளார்.

இதுகுறித்து அவர் வெளி யிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டு இருப்பதாவது:–

பண்ணை குட்டைகள்

தமிழகத்தில் வடகிழக்கு பருவ மழை பொய்த்ததன் காரணமாக காவிரி டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு தேசிய ஊரக வேலை வாய்ப்பு உறுதி திட்டத்தின்கீழ் ரூ.181 கோடி மதிப்பீட்டில் 15 ஆயிரம் பண்ணை குட்டைகள் அமைக்க முதல்–அமைச்சர் உத்தரவிட்டு உள்ளார்.

இந்த பண்ணை குட்டை களை பயன்படுத்தி, விவசாயி கள் பயிர்களில் நீர் வற்றிய இக்கட்டான கால கட்டத்தில் பாதுகாத்திட தேவைப்படும் இறுதி கட்ட நீர் தேவையை பூர்த்தி செய்வதுடன் அவற்றில் மீன் வளர்ப்பதன் மூலம் விவசாயிகள் கூடுதல் வருவாய் ஈட்டிடவும் வாய்ப்பு உள்ளது. இத்தகைய உயரிய நோக்கத் தோடு விவசாயிகளின் நிலங் களில் அமைக்கப்படும் பண்ணை குட்டைகளில் மீன் வளத்துறை மூலம் மீன் வளர்க்க ஓராண் டிற்கு தேவையான இடு பொருள்

மானிய தொகையை வழங்க அரசால் ரூ.12 கோடியே 85 லட்சம் மதிப்பீட்டில் அரசாணை வெளியிடப்பட்டு உள்ளது.

மானியம்

அதன்படி மீன் குஞ்சு வளர்ப்பிற்கு ஒரு பண்ணை குட்டைக்கான 50 சதவீத மானியத்தொகை ரூ.20 ஆயிர மாகும். மீன் வளர்ப்புக்கு ஒரு பண்ணை குட்டைக்கான 50 சதவீதம் மானியத்தொகை ரூ.17ஆயிரத்து 500 ஆகும்.

இத்திட்டதின் மூலம் பயனடைய விரும்பும் கரூர் மாவட்ட ஊரக வளர்ச்சி துறை மூலம் தேர்வு செய்யப் பட்ட பண்ணை குட்டை விவசாயிகள், தங்கள் விண் ணப்பங்களை தங்களது விவசாய நில விவரங்களுடன், கலெக்டர் கரூர் மாவட்டம் என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ வருகிற 31–ந்தேதிக்குள் விண் ணப்பிக்க வேண்டும்.

இவ்வாறு அந்த செய்தி குறிப்பில் கூறப்பட்டு உள் ளது.

## தென் மாவட்ட விவசாயிகளுக்கும் ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் நிவாரணம் மள்ளர் நாடு அமைப்பினர் கோரிக்கை

மதுரை

தமிழகத்தில் கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள தென் மாவட்ட விவசாயிகளுக்கும் ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும் என்று மள்ளர்நாடு அமைப்பினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ரூ.20 ஆயிரம் நிவாரணம்

மள்ளர் நாடு அமைப்பின் மாநில செயற்குழு கூட்டம் மதுரையில் நேற்று நடந்தது. நிறுவன தலைவர் சுப.அண்ணாமலை தலைமை தாங்கினார். பொதுச்செயலாளர் சோலை.பழனிவேல்ராஜன் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். இதன் முடிவில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:–

தேவேந்திரர்களை அட்டவணை சாதியில் சேர்த்ததால் அவர்களது வரலாறு மறைக்கப்பட்டுள்ளது. எனவே மத்திய, மாநில அரசுகள் எங்கள் கோரிக்கையை ஏற்று எங்கள் பிரிவுகளின் கீழ் உள்ள

சாதிகளை ஒருங்கிணைத்து 10 சதவீத இட ஒதுக்கீடு வழங்க வேண்டும். டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு அறிவித்த நிவாரணத்தை தமிழக அரசு உடனடியாக அமல்படுத்த வேண்டும்.

சிவகங்கை, ராமநாதபுரம், மதுரை, நெல்லை, தூத்துக்குடி, தேனி, திண்டுக்கல், விருதுநகர் மாவட்டங்களையும் வறட்சி மாவட்டமாக அறிவித்து ஏக்கருக்கு ரூ.20 ஆயிரம் நிவாரணம் வழங்க வேண்டும். இலங்கையில் நடைபெற்ற கொடுமைகளை வன்மையாக கண்டிப்பதுடன், இந்திய அரசு ராணுவத்தை இலங்கைக்கு அனுப்பி தனி ஈழம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வன்கொடுமைகள்

கடந்த 2011–ம் ஆண்டு பரமக்குடியில் நடந்த துப்பாக்கிச்சூடு சம்பவத்தில் நீதி கிடைக்க தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும். அ.தி.மு.க. ஆட்சியில் தேவேந்திரர்கள் மீதான தாக்குதல் சம்பவங்கள் குறைந்துள்ளது. இந்த நிலை நீடிக்க வேண்டும்.

தீவிரவாதிகள் தாக்குதலில் இறந்த மதுரை மாவட்டத்தை சேர்ந்த பெருமாளின் குடும்பத்தினருக்கு ரூ.20 லட்சம் உதவித்தொகை வழங்க வேண்டும். தமிழகத்தில் பல்வேறு இடங்களில் நடைபெறும் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளில் உரிய நடவடிக்கை எடுப்பதுடன், அவற்றை தடுத்திடும் வகையில் சட்டங்களை கடுமையாக்க வேண்டும்.

மேற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## நிலமற்ற ஏழை விவசாயிக்கு அரசால் வழங்கப்பட்ட நிலத்தை அளந்து கொடுக்க, ஐகோர்ட்டு உத்தரவு

மதுரை

திருச்சி மாவட்டம் மணப்பாறை தாலுகா டி.எடையப்பட்டியை சேர்ந்தவர் பொன்னாத்தாள். இவர், மதுரை ஐகோர்ட்டு கிளையில் தாக்கல் செய்துள்ள மனுவில் கூறி இருப்பதாவது:–

நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு அரசு இலவசமாக நிலம் வழங்கும் திட்டம் கடந்த 2006–ம் ஆண்டு கொண்டுவரப்பட்டது. இந்த திட்டத்தின் கீழ் 2007–ம் ஆண்டு டி.எடையப்பட்டி கிராமத்தில் எனக்கு ஒரு ஏக்கர் நிலம் வழங்கப்பட்டது. இதற்கு, மணப்பாறை தாசில்தார் பட்டா வழங்கி உள்ளார். நானும், அந்த நிலத்துக்கு வரி செலுத்தி உள்ளேன். ஆனால், இதுவரை நிலத்தை அளந்து கொடுக்கவில்லை. இதனால் தனிநபர்கள் சிலர், அந்த இடத்தை ஆக்கிமிக்க முயற்சித்து வருகின்றனர். அதிகாரிகளின் அலட்சியம் காரணமாக, ஏழை மக்களுக்காக கொண்டு

வரப்பட்டுள்ள திட்டம் பாழாகி வரும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, அரசு எனக்கு வழங்கிய நிலத்தை அளந்து கொடுக்க உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறப்பட்டு இருந்தது.

இந்த மனு நீதிபதி கே.கே.சசிதரன் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது. மனுதாரர் சார்பில் வக்கீல் ஏ.வடிவேல் ஆஜராகி வாதாடினார். மனுவை விசாரித்த நீதிபதி, வருகிற 28–ந் தேதிக்கு முன்னதாக மனுதாரருக்கு அரசால் வழங்கப்பட்ட நிலத்தை அளந்து கொடுக்க வேண்டும் என்று மணப்பாறை தாலுகா சர்வேயருக்கு உத்தரவிட்டார்.

**பயிர் கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் வறட்சிநிவாரண குழுவிடம் விவசாயிகள் மனு**

சிவகங்கை,

சிவகங்கை மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப் பட்ட பயிர்களுக்கு பயிர் கடனை முழுமையாக தள் ளுபடி செய்ய வேண்டும் என்று வறட்சிநிவாரண குழுவிடம் விவசாயிகள் மனு அளித்துள்ளனர்.

<u>நஷ்ட ஈடு</u>

தமிழக நிதி அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையில் தமிழக அமைச்சர் மற்றும் அதிகாரிகளை கொண்ட உயர் மட்டகுழு சிவகங்கை மாவட் டத்தில் வறட்சி பகுதிகளை பார்வையிட்டனர். அப்போது, இந்த குழுவிடம் தமிழ்நாடு விவசாய சங்க மாநில தலைவர் குணசேகரன், மாவட்ட தலை வர் கலையரசன் ஆகியோர் கொடுத்துள்ள மனுவில் கூறியி ருப்பதாவது:–

சிவகங்கை மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக விவசாயிகளுக்கு ஏக்கருக்கு நஞ்சை நிலத்திற்கு ரூ.15 ஆயிரமும், புஞ்சை நிலத் திற்கு ரூ.10ஆயிரமும், மிளகாய் பயிருக்கு ரூ.25 ஆயிரமும் வழங்க வேண்டும். கால்நடை விவசாயிகளுக்கு விலையில் லாமல் கால்நடை தீவனம் வழங்கவேண்டும். குடிநீருக்கு கடும் பற்றாக்குறை ஏற்பட்டுள் ளதால் கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும்.

கடந்த வறட்சிகாலத்தில் அமைக்கப்பட்ட 350 சமுதாய கிணறுகளை மராமத்து செய்து பயன்பாட்டுக்கு கொண்டு வரவேண்டும். கிரா மத்து ஊரணிகளை சீர்படுத்தி கம்பி வேலியிட்டு குடிநீர் வழங்க வேண்டும். பண்ணை குட்டை வெட்ட கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும் என்பது

உள்ளிட்ட 15 கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும். இவ் வாறு அந்த மனுவில் கூறியிருந் தனர்.

<u>விவசாய சங்கத்தினர் மனு</u>

இதே போல் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டுகட்சி சார்பில் அதன் மாவட்ட செயலாளர் கந்தசாமி மற்றும் தமிழ்நாடு விவ சாய சங்க மாவட்ட தலை வர் மாணிக்கம், செயலாளர் ஆதிமூலம் ஆகியோர் கொடுத் துள்ள மனுவில், விவசாய தொழிலாளர்களுக்கு குறைந்த பட்சம் நிவாரணமாக ரூ.10 ஆயி ரம் வழங்க வேண்டும். வேலையின்றி வெளியூர் செல் வதை தவிர்க்க மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதித் திட்டத்தில் 250 நாட்கள் வேலைவழங்கிட வேண்டும். இதேபோல் மானாவாரி பயிர் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ரூ.15 ஆயிரமும், தோட்டகலை பயிர்களுக்கு ரூ.40ஆயிரமும் நிவாரணம் வழங்க வேண்டும் என்று கூறியிருந்தனர்.

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பில் கொடுக்கப் பட்டுள்ள மனுவில், பயிர் கடனை முழுமையாக தள்ளு படி செய்து பயிர் பாதிப்புக்கு உரிய இழப்பீடு வழங்க வேண்டும். தண்ணீர்இல்லா மல் பயிரிடப்படாத நிலங் களுக்கும் இழப்பீடு தொகை வழங்க வேண்டும் என்றுகூறியி ருந்தனர். சிவகங்கை ஒன்றிய விவசாய சங்க தலைவர் இக்னேஷியஸ் கொடுத்துள்ள மனுவில், விவ சாயிகள் வாங்கிய வங்கி கடனை தள்ளுபடி செய்ய வேண் டும் என்று கூறியிருந் தார்.

மேலும் சிவகங்கை, ராமநாதபுரம் மாவட்ட கரும்பு உற்பத்தி யாளர் சங்கத் தின் சார்பில் செயலாளர் ரகு நாதன், உடையப்பன் மற்றும் நிர்வாகிகள் கொடுத் துள்ள மனுவில், சிவகங்கை, ராமநாத புரம் மாவட்டத்தில் 17 ஆயிரம் ஏக்கர் கரும்பு பயிரி டப் பட் டுள்ளது. இந்தஆண்டு தண் ணீர், மின்சாரம் பற்றாக் குறை யால் நஷ்டம் ஏற்பட் டுள்ளது. எனவே ஏக்கருக்கு ரூ.25 ஆயி ரம் நஷ்ட ஈடு வழங்க வேண்டும் என்று கூறி யிருந்தனர்.

இதே போல் தமிழ்நாடு வரு வாய்துறை அலுவலர் சங்கத் தின் சார்பில் மாவட்ட தலை வர் மகேந்திரன் தலைமையில், அதன் நிர்வாகிகள் அமைச்சர் மற்றும் அதிகாரிகளிடம் கொடுத் துள்ள மனுவில், சிவகங்கை மாவட்டத்தில் 9 தாசில்தார் பணியிடம் காலி யாக உள்ளது. இங்கு ஏற்கனவே 15 பணியிடங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே காலியான இடங்களை பூர்த்தி செய்ய வேண்டும். அத்துடன் சிவகங்கையில் தாலுகா அலு வலகத்திற்கு புதிய கட்டிடம் கட்டும் பணி பாதியில் நிற்கி றது. அதை மீண்டும் தொடங்கி முடிக்க வேண்டும். திருப்பத் தூரில் கட்டி முடிக்கப்பட்டுள்ள தாலுகா அலுவலக கட்டி டத்தை பயன்பாட்டுக்கு கொண்டு வரவேண்டும் என்று அந்த மனுவில் கூறி யிருந்தனர்.

## நடப்பு 2012–13 பருவத்தில் எண்ணெய் வித்து உற்பத்தி 2.6% உயரும்

புதுடெல்லி

நடப்பு 2012–13 பருவத்தில் எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி 2.6 சதவீதம் அதிகரித்து 2.67 கோடி டன்னாக உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. கடுகு உற்பத்தி அதிகரித்ததே இதற்கு காரணம் என வல்லுனர்கள் தெரிவித்துள்ளனர்.நடப்பு பருவத்தில் கடுகு உற்பத்தி 22 சதவீதம் அதிகரித்து 71.50 லட்சம் டன்னாக இருக்கும் என எண்ணெய் துறை மற்றும் வர்த்தக அமைப்பு மதிப்பிட்டுள்ளது. ராஜஸ்தான் மாநிலத்தின் வட பகுதியில் கடுகு உற்பத்தி 25 சதவீதம் அதிகரித்து 34.30 லட்சம் டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.கடுகு உற்பத்தி அதிகரிப்பின் காரணமாக, நாட்டின் சமையல் எண்ணெய் இறக்குமதி சுமார் 5 லட்சம் டன் குறையும் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர். இதன் இறக்குமதியில் உலக அளவில் இந்தியா முதலிடத்தில் உள்ளது. கடந்த ஜனவரி மாதத்தில் தாவர எண்ணெய் இறக்குமதி வரலாறு காணாத அளவிற்கு 12 லட்சம் டன்னாக உயர்ந்தது. மலேசியாபாமாயில் ஏற்றுமதி மீதான வரியை ரத்து செய்ததையடுத்து அந்நாட்டிலிருந்து பாமாயில் இறக்குமதி அதிகரித்ததே இதற்கு முக்கிய காரணமாகும்.

## நடப்பு பருவத்தில் இதுவரை 26 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதி

புதுடெல்லி

பொதுத்துறை வர்த்தக நிறுவனங்களான எம்.எம்.டி.சி., எஸ்.டி.சி. மற்றும் பி.இ.சி. ஆகியவற்றின் வாயிலாக நடப்பு 2012–13 பருவத்தில் மார்ச் 12–ந் தேதி வரை 25.58 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளதாக மத்திய உணவுத்துறை அமைச்சர் கே.வி.தாமஸ் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார். வரும் ஜுன் 30–ந் தேதிக்குள் மொத்தம் 45 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.கடந்த சில ஆண்டுகளாக கோதுமை உற்பத்தி அமோக வளர்ச்சி கண்டு வரும் நிலையில், அதிகரித்து வரும் கையிருப்பை குறைக்கும் விதமாக, 2011 செப்டம்பர் மாதத்தில் கோதுமை ஏற்றுமதி மீதான தடை நீக்கப்பட்டது. 2012 ஜுன் மாதத்திலிருந்து அரசு கிடங்குகளிலிருந்து கோதுமை ஏற்றுமதி செய்ய அனுமதி அளிக்கப்பட்டது. எனினும், 2012–ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்திற்குப் பிறகுதான் கோதுமை ஏற்றுமதி விறுவிறுப்படைந்தது. அரசு சேமிப்பு கிடங்குகளில் கடும் இடப்பற்றாக்குறை உள்ளதால் கையிருப்பில் உள்ள கோதுமையை உள்நாட்டு சந்தையிலும், வெளிநாடுகளிலும் விற்பனை செய்ய மத்திய அரசு கொள்கை ரீதியாக முடிவெடுத்தது.

தினகரன்

## யானைகளால் பயிர்கள் சேதம் 20ம் தேதிக்குள் கோரிக்கை மனு அளிக்க வேண்டுகோள்

கள்ளக்குறிச்சி, : கள்ளக்குறிச்சி மாவட்ட வன அலுவலர் ஜெயபாலன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

கல்வராயன் மலைப்பகுதியின் அடிவாரத்தில் கடந்த பிப்ரவரி மாதம் 16ம் தேதியிலிருந்து 28ம் தேதி வரையில் முகாமிட்டிருந்த காட்டுயானைகளால் அருகிலிருந்த விவசாய நிலங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டது.

இதில் பயிர்கள், கால்நடைகள் உயிர்சேதமும் ஏற்பட்டது. இதில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கபட உள்ளது. எனவே இதில் பாதிக்கப்பட்ட மக்கள் சம்பந்தப்பட்ட கிராமநிர்வாக அலுவலரிடம் நிலத்தின் சர்வே எண், பரப்பு சேதமடைந்த பயிர் விவரம் ஆகியவற்றை பெற்ற பின் சம்பந்தப்பட்ட விவசாய அலுவலரிடம் சேதமதிப்பை பெற்று கள்ளக்குறிச்சி மாவட்ட வன அலுவலகத்தில் வரும் 20ம் தேதிக்குள் கோரிக்கை மனுவை வழங்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## செஞ்சியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க கோரிக்கை

செஞ்சி, : விழுப்புரம் மாவட்டத்தில் செஞ்சி பகுதியில் உள்ள பெரும்பாலான மக்களின் முக்கிய தொழில் விவசாயமாகும். விவசாயத்தை நம்பியே இப்பகுதி மக்கள் உள்ளனர். செஞ்சி வட்டத்தில் உள்ள 50 ஆயிரம் ஹெக்டேரில் 15 ஆயிரம் ஹெக்டேரில் மணிலாவும், 15 ஆயிரம் ஹெக்டேரில் நெல்லும், 20 ஆயிரம் ஹெக்டேரில் பிற தானிய பயிர் வகைகளும் பயிர் செய்து வருகின்றனர். நெல் பயிரிட ஏரி, ஆறு, கிணறு பாசனங்கள் மூலம் பிரித்து பகுதிக்கு ஏற்ப பயிர் செய்து வருகின்றனர்.

கடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் கிணற்று பாசனம் மூலம் பயிர் செய்து வந்தனர். இந்நிலையில் தற்போது அறுவடை முடிந்த நிலையில் நெல் மூட்டைகளை செஞ்சி மார்க்கெட் கமிட்டியில் விற்பனை செய்து வருகின்றனர். இதில் தினமும் 4 ஆயிரம் நெல் மூட்டைகள் விற்கப்படுகின்றன. ஆனால் நெல் மூட்டைக்கு போதிய விலை கிடைக்கவில்லை. கடந்த மாதம் விற்ற விலையை விட தற்போது ரூ.400 முதல் ரூ.500 வரை விலை குறைந்துள்ளது.

இதனால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் அரசு அறிவித்த விலையை விட

குறைவாக விலை போகிறது. எனவே இதனை போக்க அரசு செஞ்சி பகுதியில் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை அமைக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை வைத்துள்ளனர்.

### துல்லிய பண்ணை சாகுபடியில் மூன்று மடங்கு விளைச்சல்

தர்மபுரி, : தர்மபுரி மாவட்ட நீர்வள மற்றும் நில வள திட்டத்திற்கான தொழில்நுட்ப அலுவலர்கள் பயிற்சி தர்மபுரியில் நடந்தது.
பயிற்சிக்கு தோட்டக்கலை இணை இயக்குனர் பெரியசாமி முன்னிலை வகித்தார். வேளாண்மை இணை இயக்குனர் மனோகரன் தலைமை வகித்தார்.
தோட்டக்கலை துறை துணை இயக்குனர் இம்மானுவேல் (பொ) வரவேற்றார். பாப்பாரப்பட்டி வேளாண் அறிவியல் மைய முனைவர் தமிழ்செல்வன், பேராசிரியர்கள் இந்துமதி, ஆண்டர்சன் அமல்குமார், சங்கீதா, சண்முகம், பொறியாளர் ராஜசேகரன் ஆகியோர் பயிற்சியளித்தனர்.
நிறைவு நாளான 14ம் தேதி, தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வயல்வெளி பயணம் மேற்கொள்ளப்பட்டது. இதில் காரிமங்கலம் வட்டார பசுமை இல்லங்களில் குடை மிளகாய், வெள்ளரி, சாமந்தி சாகுபடி, பேரிகையில் துல்லிய பண்ணைய சாகுபடியில் உருளை, பீன்ஸ், காரட், பந்தல் காய்கறிகள், பசுமை இல்லங்களில் ரோஜா, ஜெர்பரா உள்ளிட்ட மலர் சாகுபடி பார்வையிடப்பட்டது. பசுமை இல்லத்தில் முட்டைக்கோஸ் சாகுபடி மும்மடங்கு விளைச்சல் இருப்பது பார்வையிடப்பட்டது. பெலகொண்டபள்ளி, தளி, அகலகோட்டா ஆகிய ஊர்களில் விளைவிக்கப்படும் தோட்டக்கலை பயிர்களின் நாற்றங்கால்களும் பார்வையிடப்பட்டன.
பயணத்திற்கான ஏற்பாடுகளை துல்லிய பண்ணை இணை இயக்குனர் பெரியசாமி செய்திருந்தார்.

### விவசாயிகளுக்கு வட்டியில்லா கடன் வழங்கும் காலம் விரைவில் கனியும் மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் பேச்சு

காரைக்குடி, : விவசாயிகளுக்கு வட்டியில்லா கடன் வழங்கும் காலம் கனியும் என மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் கூறினார்.
காரைக்குடியில் நடந்த மத்திய அரசு பட்ஜெட் விளக்க கூட்டத்தில் மத்திய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் பேசியதாவது: 2004-2008, 2010, 2011 ஆகிய ஆண்டுகளில் இந்தியா 8 சதவீத பொருளாதார வளர்ச்சி அடைந்தது. எஞ்சிய ஆண்டுகளில் 9 சதவீத வளர்ச்சி யை கண்டது. 2008ல் உலகளவில் ஏற்பட்ட பொரு ளாதார வீழ்ச்சியின்போது இந்தியா மட்டுமே 5 சதவீத பொருளாதார வளர்ச்சியை எட்டியது. ஸ்பெயின், அயர்லாந்து, கிரீஸ் ஆகிய நாடுகள் திவாலாயின. கடைசி 3 ஆண்டுகளில் ஜெர்மன் நாட்டின் பொருளாதார வளர்ச்சி மிகவும் குறைந்துள்ளது. இந்தியா, சீனா, இந்தோனேசியா நாடுகள் நடப்பாண்டு பொருளாதார வளர்ச்சி பட்டியலில் சிறப்பிடம் பெற்றுள்ளன. 5 சதவீத வளர்ச்சி என்பது நாட்டின் முன்னேற்றத்திற்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடியதல்ல. ஆண்டுக்கு ஒரு கோடி புதிய வேலை வாய்ப்பை உருவாக்கினால் 8 சதவீத வளர்ச்சியை அடையலாம்.

2003ம் ஆண்டில் 10 சதவீத வட்டியில் விவசாயக்கடன் கொடுக்கப்பட்டது. தற்போது 7 சதவீத வட்டியில் விவசாயக் கடன் கொடுக்கப்படுகிறது. திரும்பச் செலுத்தும் விவசாயிகளுக்கு 4 சதவீத வட்டியில் கடன் கொடுக்கப்படுகிறது. அடுத்த நிதி ஆண்டில் ரூ.7 லட்சம் கோடி பயிர்க்கடன் வழங்கப்படும். வரும் காலங்களில் விவசாயிகளுக்கு வட்டியில்லா கடன் வழங்கும் நிலை உருவாகும். அதற்கான காலம் விரைவில் கனியும். வரும் நிதியாண்டில் தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்திற்கு ரூ.33 ஆயிரம் கோடி ஒதுக்கப்படுகிறது. நபருக்கு ரூ.148 தினக்கூலி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.

நவம்பரில்

பெண்கள் வங்கி

பெண்கள் வங்கி நவம்பரில் துவங்க உள்ளதாக ப.சிதம்பரம் தெரிவித்தார்.

பாதுகாப்பு துறைக்கு அடுத்த படியாக ஊரக வளர்ச்சி துறைக்கு 80 ஆயிரத்து 194 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இனி ஊராட்சிகளுக்கு தேவையான நிதி வராவிட்டால் அது மாநில அரசின் குற்றம். 10 ஆயிரம் புதிய பஸ்கள் வாங்கப்பட உள்ளன.

உணவு உரிமை சட்டம் இந்த நாடாளுமன்ற கூட்டத் தொடரில் கொண்டு வரப்படும். தமிழகத்துக்கு என இரண்டு பெரிய திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. வங்கி துறைக்கு என ரூ.14 ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஓராண்டில் இந்தியா முழுவதும் அனைத்து வங்கிகளிலும் ஏடிஎம் வசதி செய்யப்படும். பட்ஜெட்டில் அறிவிக்கப்பட்ட பெண்கள் வங்கி வரும் நவம்பர் மாதம் துவங்கப்படும். ஆண்டு 10 லட்சம் இளைஞர்களுக்கு கைத்திறன் பயிற்சி அளிக்கப்பட உள்ளது' என்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் எம்எல்ஏக்கள் ராமசாமி, சுந்தரம், ராமசுப்புராம். மாவட்ட தலைவர் ராஜரத்தினம். பாராளுமன்ற இளைஞர் காங். தலைவர் நெல்லியான், துணைத்தலைவர் கருமாணிக்கம். ஊராட்சி தலைவர்கள் மாங்குடி, அழகப்பன், நகர செயலாளர் குமரேசன் உள் பட பலர் கலந்து கொண் டனர். நகரத்தலைவர் சிவானந்தம் நன்றி கூறினார்.

## தூத்துக்குடியில் விவசாயிகள் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம்

தூத்துக்குடி, : தூத்துக்குடி தாலுகா அல்லிகுளம், சேர்வைக்காரன்மடம், வாகைகுளம், புதுக் கோட்டை சுற்று வட்டார பகுதிகளில் லாரிகள் மூலம் தண்ணீர் உறிஞ்சி தொழிற்சாலைகளில் வினியோகம் செய்வதை தடை செய்ய வேண்டும். முடிவைத்தானேந்தல், மஞ்சநீர்காயல், கோரம்பள்ளம் மக்களுக்கு இலவச பட்டா வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் சார்பில் புதுக்கோட்டையில் ஆர்ப்பாட்டம் நடந்தது. ஆர்ப்பாட்டத்துக்கு தமிழ்நாடு விவசாயிகள் சங்க ஒன்றிய செய லாளர் சங்கரன் தலைமை வகித்தார். ஒன்றிய தலைவர் மயிலேறும்பெரு மாள், ஒன்றிய பொருளாளர் முனிய சாமி முன்னிலை வகித்தனர். தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் பெருமாள் ஆர்ப்பாட்டத்தை துவக்கி வைத்து பேசினார். மாநில பொதுச்செய லாளர் சண்முகம் ஆர்ப்பாட்டத்தை நிறைவு செய்து பேசினார்.இதில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க மாவட்ட பொருளாளர் கணபதி, துணை தலைவர் சீனிவாசன், ஸ்ரீவைகுண்டம் ஒன்றிய தலைவர் பொன்ராஜ், ஒன்றிய துணை தலைவர் நயினார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## தூத்துக்குடியில் 21ஆம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம்

தூத்துக்குடி, : தூத்துக்குடி மாவட்ட கலெக்டர் ஆசிஷ்குமார் வெளியிட்ட செய்திக்குறிப்பில், 'மாவட்ட விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் மாதந்தோறும் 3வது வியாழக்கிழமை நடத்தப்படும். அதன்படி இம்மாதத்துக்கான கூட்டம் 21ஆம் தேதி முற்பகல் 11 மணிக்கு ஆட்சியர் அலுவலகத்தில் நடக்கிறது. கலெக்டர் தலைமையில் நடைபெறும் கூட்டத்தில் விவசாய சங்கத் தலைவர்கள், பாசன சங்கப் பிரதிநிதிகள், விவசாயிகள் பங்கேற்று தங்களது குறைகளைத் தெரிவிக்கலாம்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இன்று விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்

காஞ்சிபுரம்,: காஞ்சிபுரம் கலெக்டர் சித்திரசேனன் வெளியிட்டுள்ள அறிக்கை: காஞ்சிபுரம் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் கலெக்டர் அலுவலகத்திலுள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்டரங்கில் கடந்த 15ம்தேதி மாலை 3 மணிக்கு நடப்பதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

தவிர்க்க முடியாத காரணத்தால் இன்று 18ம்தேதிக்கு கூட்டம் தள்ளி வைக்கப்பட்டது. எனவே, விவசாயிகள் கூட்டத்தில் தவறாது கலந்து கொண்டு பயன்பெறும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## பட்டு விவசாயிகளுக்கு தொழில் நுட்ப பயிற்சி

தேன்கனிக்கோட்டை, : கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை பட்டு வளர்ச்சி துறை சார்பில் சென்னிமாளம் கிராமத்தில் கிரியா ஊக்கி திட்டத்தில் விவசாயிகளுக்கு பட்டு உற்பத்தி தொழில் நுட்ப பயிற்சி வழங்கப்பட்டது.

தளி உதவி ஆய்வாளர் கண்ணன் வரவேற்றார். தேன்கனிக்கோட்டை பட்டு வளர்ச்சிதுறை உதவி இயக்குநர் தீர்த்தகிரி தலைமை தாங்கி அரசு மானிய திட்டங்கள் குறித்து விரிவாக பேசினார். மத்திய பட்டுவாரிய விஞ்ஞானி முனைவர் சமுத்திரவேல் மல்பரி தோட்டபராமரிப்பு, இளம் புழுவளர்ப்பு மற்றும் நவீன வெண்பட்டு புழுவளர்ப்பு தொழில் நுட்பங்கள் குறித்து விரிவாக எடுத்துரைத்தார். கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளரக சென்னிமாளம் ஊராட்சி தலைவர் திப்பாரெட்டி கலந்து கொண்டார். இளநிலை ஆய்வாளர்கள் வெங்கடேசன், ஆரோக்கியசாமி ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் பட்டு விவசாயிகள் பெரும் திரளாக கலந்து கொண்டனர். தொழில்நுட்ப உதவியாளர் பாபு நன்றி கூறினார்.

## வங்கிகள் மூலம் பெற்ற விவசாயிகளின் முழு கடனையும் தள்ளுபடி செய்ய வேண்டும் மத்திய அரசுக்கு,எம்பி வலியுறுத்தல்

சீர்காழி, : மயிலாடுதுறை தொகுதி எம்.பியும், மக்களவை அதிமுக கொறடாவுமான ஓ.எஸ்.மணியன் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழகத்தின் டெல்டா மாவட்டங்களான தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் இந்தாண்டு விவசாயிகள் 11 லட்சம் ஏக்கரில் பயிரிடப்பட்ட சம்பா நெற்பயிர்கள் போதிய மழையில்லாததாலும், காவிரியில் கர்நாடக அரசு தண்ணீர் திறந்து விட மறுத்ததாலும் நெற்பயிர்கள் தண்ணீரின்றி கருகி விவசாயிகளுக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டது. தமிழக முதல்வர், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ.15,000 வழங்க உத்தரவிட்டார்.

கடந்த 50 ஆண்டுகளாக தமிழகத்திற்கு தரவேண்டிய தண்ணீரை கர்நாடக அரசு தராமல் தமிழகத்தை வஞ்சித்து வந்தது. இதனால் டெல்டா மாவட்டங்களில் முப் போக சாகுபடிகள் செய்ய முடியாமல் ஒருபோக சாகுபடி செய்யும் சூழ்நிலை உருவானது. தமிழக முதல்வரின் முயற்சியால் காவிரி நடுவர் மன்ற இறுதி தீர்ப்பு மத்திய அரசிதழில் வெளியிடப்பட்டது.

தமிழகம் ஒரு தாழ்வான சமவெளி ஆயக்கட்டு பகுதி யாக இருப்பதால் பெரும் பாதிப்புகள் ஏற்படுகிறது. இதனை கருத்தில் கொண்டு காவிரி மேலாண்மை வாரியத்தை உடனடியாக அமைக்க வேண்டும். இதுவே தமிழக விவசாயிகளுக்கு நிரந்தர தீர்வாகும். இந்தாண்டு விவசாயிகளுக்கு அதிக பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் மத்திய அரசு வங்கியில் விவசாயிகள் பெற்ற கடனை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும். இதுகுறித்து மக்களவையில் பேசியுள்ளேன். விவசாயதுறை அமைச்சரிடம் கோரிக்கை மனு கொடுத்துள்ளேன்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## தண்ணீரின்றி காய்ந்த கரும்பு?பயிர்களுக்கு?இழப்பீடு வழங்க?விவசாயிகள்?கோரிக்கை

தேவதானப்பட்டி, : தேவதானப்பட்டி பகுதியில் தண்ணீரின்றி காய்ந்த கரும்பு பயிர்களுக்கு விரைவில் இழப்பீடு வழங்க வேண்டும் என பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தேவதானப்பட்டி மற்றும் அதனை சுற்றியுள்ள கெங்குவார்பட்டி, காமக்காபட்டி, எருமலைநாயக்கன்பட்டி, பொம்மிநாயக்கன்பட்டி, குள்ளப்புரம் உள்ளிட்ட இடங்களில் கரும்பு விவசாயம் செய்யப்பட்டது.

பருவமழை பொய்த்ததால் நீர்நிலைகளில் தண்ணீர் வற்றியது. இப்பகுதியில் தண்ணீரின்றி பல இடங்களில் கரும்பு பயிர்கள் காய்ந்துவிட்டன. இதனால், கரும்பு விவசாயிகள் கடுமையாக நஷ்டமடைந்துள்ளனர். தண்ணீரின்றி காய்ந்த கரும்பு பயிர்களுக்கு அரசு விரைவில் இழப்பீடு வழங்க வேண்டும் என பாதிக்கப்பட்ட கரும்பு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து கெங்வார்பட்டியைச் சேர்ந்த கண்ணன் கூறுகையில், ‘‘இந்தாண்டு போதிய மழை இல்லாததால் கரும்பு பயிர்களை சிரமப்பட்டு காப்பாற்றி வந்தோம்.

நிலத்தடிநீர் அகலபாதாளத்திற்கு சென்று விட்டதால் 6 மாத நிலையில் உள்ள கரும்பு பயிர்கள் காய்ந்துவிட்டன. தண்ணீரின்றி காய்ந்த கரும்புகளை கணக்கிட்டு உரிய நிவாரணம் வழங்க வேளாண்த்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்,’’என்றார்.

## 22ம் தேதி நடக்கிறது விவசாயிகள் குறைதீர் கூட்டம்

நாமக்கல், : நாமக்கல் மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 22ம் தேதி(வெள்ளி) காலை 11 மணிக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடக்கிறது. நிகழ்ச்சிக்கு ஆட்சியர் ஜெகநாதன் தலை மை வகித்து குறைகளை கேட்டறிகிறார். இதில் விவசாயிகள், விவசாயி கள் சங்க பிரதிநிதிகள் கலந்து கொ ண்டு தங்களது குறைகளை தெரிவிக்குமாறு ஆட்சியர் கேட்டுக்கொண்டுள்ளார்.

## கொங்கு மண்டல விவசாயிகளுக்கும் வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும்

திருச்செங்கோடு, : வறட்சி பாதித்த கொங்கு மண்டல விவசாயிகளுக்கும் வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் என கொ.மு.க. வலியுறுத்தியுள்ளது.

திருச்செங்கோட்டில் கொங்கு இளைஞர் கமாண்டோ படை பயிற்சி முகாம் மற்றும் ஆலோ சனை கூட்டம் நடைபெற்றது. இதில், கொங்கு நாடு முன்னேற்றக்கழக பொதுச்செயலாளர் ஈஸ் வரன் கலந்து கொண்டார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

ஐநா சபையில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்திய அரசு கொண்டு வந்திருக்க வேண்டும். ஆனால், அமெரிக்கா கொண்டு வருகிற தீர்மானத்தையாவது ஆதரிப்போம் என்று

அறிக்கை கூட வெளியிடவில்லை. தமிழர் பிரச்னை இலங்கையின் உள்நாட்டு பிரச்னை என்று கூறி மத்திய அரசு தப்பிக்க முடியாது. இன்று தமிழகத்தில் இலங்கைக்கு எதிரான மாணவர்கள் போராட் டம் எரிமலை போல் வெடித்துள்ளது.

வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள கொங்கு மண்டல விவசாயிகளுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும். மானிய விலையில் தீவனம் வழங்கி கால்நடைகளைக் காக்க வேண்டும். கெயில் நிறுவனம் எரிவாயு குழாய் பதிப்பதில் கருத்துக் கேட்க வேண்டிய அவசியமே இல்லை. நெடுஞ்சாலை வழியாக குழாய்களைக் கொண்டு செல்லலாம். விவசாயிகளிடம் கருத்துக் கேட்பது கண் துடைப்பாக ஆகி விடக்கூடாது.

மின்வெட்டு என்பது தமிழக மக்களின் வாழ்க்கையோடு ஒன்றி விட்டது. சென்னைக்கு சீராக மின்சாரம் தருவது போல குறுந்தொழில்கள் நிறைந்த கொங்கு மண்டலத்திற்கும் தடையில்லா மின்சாரம் வழங்க வேண்டும். இவ்வாறு ஈஸ்வரன் கூறினார்.

அப்போது தலைமை நிலைய செயலாளர் சூரியமூர்த்தி, கரூர் மாவட்ட செயலாளர் விசா.சண் முகம், நாமக்கல் வடக்கு மாவட்ட செயலாளர் நதி ராஜவேல் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## சிறு சலுகையால் பேரிழப்பு நிலவரியை ரத்து செய்ததால் அரசு மானியம் கிடைக்காது

கோபி, : தமிழகத்தில் கடந்த இரண்டு ஆண்டுகளாக போதிய அளவு பருவமழை பெய்யாததால் பெரும்பாலான அணைகள், குளம், ஏரிகள் உள்ளிட்ட நீர் நிலைகள் வறண்டு விட்டன. இதனால் தமிழகத்தில் பெரும்பாலான பகுதிகளில் நெல், கரும்பு, மஞ்சள், வாழை, தென்னை உற்பத்தி பெருமளவு பாதிக்கப்பட்டது. குறிப்பாக ஈரோடு, திருச்சி, தஞ்சை, திருவாரூர், கரூர், புதுக்கோட்டை உள்ளிட்ட காவிரி டெல்டா மாவட்டங்கள் நெல் உற்பத்தியில் கடுமையாக பாதிக்கப்பட்டது.

அதனால் இந்த ஆண்டு நில வரியை முழுவதும் ரத்து செய்ய விவசாயிகள் வலியுறுத்தினர். அதைத் தொட ர்ந்து தமிழகத்தில் உள்ள 32 மாவட்டங்களில் சென்னை யைத் தவிர 31 மாவட்டங்களில் இந்த ஆண்டிற்கான நில வரியை ரத்து செய்து தமிழக அரசு உத்தரவிட்டது. அரசின் இந்த மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டாலும், அரசின் உத்தரவால் தற்போது விவசாயிகள் அரசு மானியங்களை பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து கீழ்பவானி முறை நீர்ப்பாசன சங்க நிர்வாகி வெங்கடாசலபதி கூறியதாவது: தமிழக அரசு இந்த ஆண்டு நிலவரியை ரத்து செய்தது ஒரு சில மாவட்டங்களில் வேண்டுமானால் விவசாயிகள் முழுமையாக பயனடைந்து இருக்கலாம். ஆனால் ஈரோடு மாவட்டத்தில் அரசின் இந்த உத்தரவால் விவசாயிகள் தற்போது அரசின் மானியங்களை பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அரசு வழங்கும் எந்த ஒரு மானியத்தையும் பெறுவதற்கு சம்பந்தப்பட்ட விவசாயி தங்களுடைய நிலத்திற்கு நடப்பு ஆண்டில் நிலவரி செலுத்தி இருக்க வேண்டும். அப்போது தான்

அந்த விவசாயிக்கு, வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண்மை பொறியியல் துறை, பட்டு வளர்ச்சித் துறை உள்ளிட்ட அனைத்து விவசாயம் சார்ந்த துறைகள் மற்றும் வங்கி சார்ந்த உதவிகள் பெறமுடியும். தற்போது அரசின் நில வரி ரத்து என்ற உத்தரவால் இந்த ஆண்டு மானியங்கள் பெற முடியாத நிலை எற்பட்டுள்ளது.

அதே போன்று ஈரோடு மாவட்டத்தில் புஞ்சை நிலங்கள் சுமார் 10 லட்சம் ஏக்கரும், நஞ்சை நிலங்கள் சுமார் 6 லட்சம் ஏக்கரும் உள்ளன. இதில் புஞ்சை நிலத்திற்கு ஒரு ஏக்கருக்கு 2 ரூபாயும், நஞ்சை நிலத்திற்கு ஒரு ஏக்கருக்கு 5 ரூபாயும் நில வரியாக உள்ளது. இதனால் 5 ஏக்கர் நிலம் வைத்துள்ள விவசாயிக்கு 10 ரூபாயில் இருந்து 50 ரூபாய் வரை மட்டுமே வரி ரத்து செய்யப்பட்டு உள்ளது. அதே நேரத்தில் விவசாயிகள் மானியமாக பெற வேண்டிய பல ஆயிரம் ரூபாய் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த நிலவரி ரத்து என்ற உத்தரவால் விவசாயிகளுக்கு எந்த விதத்திலும் பயன் இல்லை.

அதே நேரத்தில் ஈரோடு மாவட்டத்தில் 2009 - 2010ம் ஆண்டிற்கான 1419 பசலிக்கு, விவசாயிகள் அரசிற்கு செலுத்த வேண்டியுள்ள நிலவரி மட்டும் சுமார் 12 கோடி ரூபாய் நிலுவையில் உள்ளது. தமிழகம் முழுவதும் சுமார் 50 லட்சம் விவசாயிகள் சுமார் 250 கோடி ரூபாய் அளவிற்கு நில வரி செலுத்தாமல் உள்ளனர். கடந்த காலங்களில் புஞ்சை பயிர்களான எள், நிலக்கடலை போன்றவற்றிற்கு ஆண்டுதோறும் ஜனவரி முதல் ஏப்ரல் வரை தண்ணீர் விடப்படும் காலங்களில் தாழ்வான பகுதிகளில் உள்ள விவசாயிகள் நஞ்சை பயிர்களான கரும்பு, மஞ்சள், வாழை, நெல் போன்றவற்றை பயிரிடும்போது, ஒரு ஏக்கருக்கு 2 ஆயிரம் ரூபாய் முதல் 4 ஆயிரம் ரூபாய் வரை பயிரை பொறுத்து, தண்டத்தீர்வை என்ற பெயரில் வரி விதிக்கப்பட்டது. அப்படி விதிக்கப்பட்ட தண்டத்தீர்வை தொகை ஈரோடு மாவட்டத்தில் மட்டும் 12 கோடி ரூபாய் வரை வசூலிக்கப்படாமல் பாக்கி உள்ளது. அரசு இந்த ஆண்டிற்கான நில வரியை ரத்து செய்ததற்கு பதிலாக 1419 பசலிக்கான நிலுவையில் உள்ள தண்டத்தீர்வைத் தொகையை ரத்து செய்தால் மட்டுமே உண்மையில் விவசாயிகளுக்கு பயன் கிடைக்கும். 2009 - 2010ம் ஆண்டிற்காக விவசாயிகள் செலுத்த வேண்டியுள்ள நிலவரியை அரசு ரத்து செய்தால் தமிழகத்தில் 50 லட்சம் விவசாயிகள் பயனடைவார்கள். இந்த ஆண்டு நில வரி ரத்து செய்யப்பட்டதால் மானியங்கள் பெற முடியாமல் உள்ள விவசாயிகளுக்கு அரசு மாற்று ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

இவ்வாறு வெங்கடாசலபதி கூறினார்.

### கோபி கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாழைத்தார் ஏலத்தில் குழப்பம் விவசாயிகள், வியாபாரிகள் மறியல்

கோபி, : கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தை கண்டித்து விவசாயிகளும், வியாபாரிகளும் சாலைமறியல் செய்தனர். பின்னர் சங்க அலுவலகத்தை முற்றுகையிட்டனர். கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரம்தோறும் இருமுறை வாழைத்தார் ஏலம் நடைபெறுவது வழக்கம். இங்கு நடைபெறும்

ஏலத்தில் கோபி, அத்தாணி, நம்பியூர், டி.என்.பாளையம் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்ட ஊர்களில் இருந்து நூற்றுக்கணக்கான விவசாயிகள், 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் வாழைத்தார்களை கொண்டு வந்து பங்கேற்பார்கள். அதே போன்று திருப்பூர், கோவை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த 25க்கும் மேற்பட்ட வியாபாரிகளும் கலந்து கொள்வது வழக்கம். இங்கு கடந்த 10 ஆண்டுகளாக நேரடி ஏல முறையிலேயே நடைபெற்று வந்தது. இந்நிலையில் நேரடி ஏல முறையினால் விவசாயிகளுக்கு உரிய விலை கிடைப்பது இல்லை என்பதாலும், முறைகேடுகள் நடைபெறுவதாலும், மறைமுக ஏல முறையை கொண்டு வரவேண்டும் என்று விவசாயிகள் வலியுறுத்தி வந்தனர். அதைத் தொடர்ந்து கடந்த மாதம் 22ம் தேதி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் மறைமுக ஏல முறையை நடைமுறைப்படுத்த கலெக்டர் சண்முகம் உத்தரவிட்டார். அதைத்தொடர்ந்து நேற்று வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ஏலத்தில் கலந்து கொள்ள வந்த விவசாயிகள் மற்றும் வியாபாரிகளை 11 மணிக்கு மேல் உள்ளே அனுமதிக்க சங்க நிர்வாகிகள் மறுத்தனர். அதைத் தொடர்ந்து விவசாயிகளும் வியாபாரிகளும் சாலை மறியலில் ஈடுபட்டனர். அதைத் தொடர்ந்து அங்கு வந்த கோபி இன்ஸ்பெக்டர் இளங்கோ மற்றும் போலீசார் மறியலில் ஈடுபட்டவர்களை கலைத்தனர். அதைத் தொடர்ந்து அவர்கள் சங்க அலுவலகத்தை முற்றுகையிட்டனர். இதுகுறித்து விவசாயிகளும், வியாபாரிகளும் கூறும்போது, ‘இதுவரை மதியம் 2 மணிக்குமேல் மட்டுமே ஏலம் நடைபெற்று வந்தது. அதனால் வழக்கம் போல் விற்பனைக்காக வாழைத்தார் கொண்டு வந்த விவசாயிகளிடம் காலை 10 மணிக்குள் வந்தால் மட்டுமே ஏலத்தில் கலந்து கொள்ள முடியும் என்று கூறுகின்றனர். இதுகுறித்து கேட்டபோது மாவட்டகலெக்டர் உத்தரவு என்று கூறுகின்றனர். கடந்த மாதம் 22ம் தேதி நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட கலெக்டர் உத்தரவிட்ட நிலையில் ஒரு மாதம் கழித்து எந்தவித முன்னறிவிப்புமின்றி திடீரென அனுமதிக்க மறுத்துள்ளனர். மாவட்ட கலெக்டரின் உத்தரவை முறைப்படி விவசாயிகளுக்கும், வியாபாரிகளுக்கும் தெரிவித்த பின்னரே நடைமுறைப்படுத்தி இருக்க வேண்டும்‘ என்றனர். அதைத்தொடர்ந்து அங்கு வந்த தனி அலுவலர் அகஸ்டின் விவசாயிகள் மற்றும் வியாபாரிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். அதைத்தொடர்ந்து மதியம் மீண்டும் நேரடி ஏல முறையையே நடைமுறைப்படுத்தினர். இந்த வாரம் மட்டும் நேரடி ஏல முறை நடக்கும், அடுத்த வாரம் முதல் கலெக்டர் அறிவித்தபடி மறைமுக ஏல முறையில் விற்பனை நடக்கும் என தெரிவிக்கப்பட்டது.

### மண்ணச்சநல்லூரில் உழவர் பாதுகாப்பு திட்ட நல உதவிகள் வழங்கும் விழா

மண்ணச்சநல்லூர், : தமிழக முதல்வரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் மண்ணச்சநல்லூரில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடந்தது. சிறப்பு விருந்தினராக கலந்துகொண்ட அமைச்சர் பூனாட்சி, 870 பயனாளிகளுக்கு உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் ரூ.87 லட்சத்து 81 ஆயிரம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசினார். கலெக்டர் ஜெயஸ்ரீ தலைமை வகித்தார்.

டிஆர்ஓ தியாகராஜன், லால்குடி ஆர்டிஓ பார்த்திபன், தாசில்தார் பவானி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.
அரசு தலைமை கொறடா மனோகரன் பேசுகையில், திருச்சி மாவட்டத்திற்கு ரூ.33 கோடி வறட்சி நிவாரண நிதியை முதல்வர் வழங்கியுள்ளதாக குறிப்பிட்டார். விழாவில் எம்.எல்.ஏ.க்கள் இந்திராகாந்தி, சந்திரசேகர், மண்ணச்சநல்லூர் ஒன்றிய சேர்மன் பரமேஸ்வரி, மாவட்ட ஜெ. பேரவை செயலாளர் ராமு, ஒன்றிய செயலாளர் ஜெயக்குமார், நகர செயலாளர் துரைசக்திவேல், பேரூராட்சி துணை தலைவர் பொன்னம்பலம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## நீலகிரி விவசாயிகளுக்கு மானிய விலையில் டீசல் வழங்க வேண்டும்

ஊட்டி, :நீலகிரி மாவட்ட விவசாயிகளுக்கு மானிய விலையில் டீசல் வழங்க வேண்டும் என்று உருளைகிழங்கு மற்றும் காய்கறி உற்பத்தியாளர்கள் சங்கம் வலியுறுத்தி உள்ளது.
நீலகிரி உருளைகிழங்கு மற்றும் காய்கறி உற்பத்தியாளர்கள் சங்க தலைவர் கிருஷ்ணமூர்த்தி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:
நீலகிரி மாவட்ட விவசாயிகளின் விளை பொரு ட்களை விற்பதற்கு பருவ நிலை காரணமாக உஷ்ணபிரதேசமான மேட்டுபாளையத்திற்கு எடுத்து சென்று விற்க வேண்டிய நிலை உள்ளது. இதனால் விவசாயிகளுக்கு ஏல முறை இல்லாத நிலையில் சரியான விலை கிடைக்காததது, சரியான எடையினை அறியாத நிலை, தொழிலாளர்கள் கூலி பிரச்சனை போன்றவைகளினால் விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்பினை நியாயமான முறையில் கேட்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்த அவல நிலையை போக்க  வேளாண்மை உற்பத்தி மேலும் குறையாமலிருக்க ஒரே இடத்தில் சுமார் 200 கடைகள் இருக்கும் வகையில்  சுமார் 50 ஏக்கர் நிலத்தில் மெகா சந்தை அமைத்து தர வேண்டும்.
நீலகிரி மாவட்டம் மலை பிரதேசம் என்பதால் மற்ற மாவட்டங்களை போல விவசாயத்திற்கு நீர்பாசனம் செய்ய முடியாது.  விவசாயிகள் பெரும்பாலும் டீசல் என்ஜின்களையே பயன்படுத்தும் நிலை உள்ளது. கிராம புறங்களுக்கு அரசு பஸ்களில் டீசல் எடுத்து செல்ல தடை உள்ளதால் விவசாயிகள் தனியார் வாகனங்களில் கூடுதலாக பணம் கொடுத்து எடுத்து செல்லும் நிலையில் அதிக நேரமும் பொரு ளாதார இழப்பு ஏற்படுகிறது. இந்த நிலையினை போக்க மீனவர்களுக்கு மானிய விலையில் டீசல் வழங்குவது போல் நீலகிரி மாவட்ட விவசாயிகளுக்கும் மானிய விலையில் டீசல் வழங்க நிதி ஒதுக்க வேண்டும்.  எனவே மெகாசந்தை, மானிய விலையில் டீசல் ஆகியவற்றிற்கான நிதியினை வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

## வறட்சியால் பருவத்திற்கு முன்பே அறுவடையாகும் முட்டைகோஸ்

குன்னூர்,: நீலகிரி மாவட்டத்தில் தேயிலைக்கு அடுத்தப்படியாக மலைத்தோட்ட காய்கறி விவசாயம்தான் அதிகளவில் மேற்கொள்ளப்படுகிறது.

இந்த ஆண்டு போதிய மழையின்மை, கடும் வெயில், பனியின் தாக்கம் உள்ளிட்ட காரணங்களால் காய்கறி விவசாயம் வெகுவாக பாதித்துள்ளது. குன்னூர் மற்றும் கோத்தகிரி பகுதியை தவிர மற்ற இடங்களில் எதிர்பார்த்த அளவு மழையில்லை. இதனால் மழையை நம்பி நடவு செய்யப்பட்ட பயிர்கள் பெரும்பாலானவை சேதம் அடைந்தன. குன்னூர் சுற்றுவட்டார பகுதி களில் முட்டைகோஸ், முள்ளங்கி, உருளைக்கிழங்கு,நூல்கோல் போன்ற மலைத்தோட்ட காய்கறிகளை பயிரிட்டுள்ளனர்.

கடந்த டிசம்பர் 2வது வாரம் பயிரிடப்பட்ட முட்டைகோஸ் தண்ணீர் இன்றி வெயில் தாக்கத்தால் காயத் துவங்கி உள்ளது. இதனால் முழு நஷ்டத்தை தவிர்க்க விவசாயிகள் முட்டைகோசை முன்கூட்டியே அறுவடை செய்து வருகின்றனர். இதற்கு உரிய விலை கிடைக்காததால் பெரும் நஷ்டமும் ஏற்பட்டுள்ளது.

எனவே தோட்டக்கலை துறையினர் இதுகுறித்து ஆய்வு செய்து பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமென வலியுறுத்தி உள்ளனர்.

## புதிதாக கண்டுபிடிக்கும் விதை ரகங்களுக்கு விவசாயிகள் பெயரில் காப்புரிமை

ஆலங்குடி, : விவசாயிகள் புதிய ரகங் களைக் கண்டு பிடித்து வைத்திருந்தால் அதனை அவரவர் பெயர்களிலேயே காப்புரிமைக்குப் பதிவு செய்வதற்கும் வே ளாண் அறிவியல் ஆராய்ச்சி மையம் உதவி செய்கிறது.புதுக்கோட்டை மாவட் டம் ஆலங்குடி அடுத்த வம் பன் வேளாண் அறிவியல் மையத்தில் விதைக் கண்டு பிடிப்புகளைப் பதிவு செய்வதற்கான பயிற்சி நடந்தது. தேசிய பயறு வகை ஆராய்ச்சி மையத் தலைவர் கீதா முன்னிலை வகித்தார். கோவை வேளாண் பல் கலைக் கழகத் தலைவர் பாஸ்கரன் வரவேற்றார். விதைப்பிரிவு தனி அலுவலர் ராமமூர்த்தி பயிறசியை துவக்கி வைத்தார். வம்பன் வேளாண் அறி வியல் மையத்தலைவர் வைரவன் தலைமை வகித் துப் பேசுகையில், மக்கள் பெருக்கம் காரணமாகவும் தேவைகளுக்காகவும் பசுமைப் புரட்சிக்காகப் பயன்படுத்தப்பட்ட ரசாயன உரங்களாலும் மண் வளம் கெட்டுப் போய் விட்டது.

இப்போது சிறுதா னிய விதைகள் விவசாயிகளிடமிருந்து ஆராய்ச்சி மைங்களுக்குத் தேடித்தேடி வாங்க வேண்டியிருக்கிறது. விவசாயிகள் தற்போது சேமித்து வைத்திருப்பதையும் தாங்கள் புதிய ரகங்களைக் கண்டு பிடித்து வைத்திருந்தால் அதனை அவரவர் பெயர்களிலேயே காப்புரிமைக்குப் பதிவு செய்வதற்கும் வேளாண் அறிவியல் ஆராய்ச்சி மையம் உதவி செய்கிறது. வேளாண் விஞ்ஞானிகளைவிட விவசாயிகள் புதிய ரகங்களைக் கண்டுபிடிப்பதிலும் உருவாக்குவதிலும் அதிக ஆர்வம் செலுத்துகின்றனர். அதனை அவர்கள் பெயரில் பதிவு செய்துவிட்டால் வருங்கால சந்ததியினருக்கும் பயனுள்ளதாக இருக்கும், என்றார். கோவை விதைப் பிரிவு தனி அலுவலர் ராமமூர்த்தி பயிற்சியை துவக்கி வைத்துப் பேசுகையில், பசுமைப் புரட்சிக்காகச் செய்த

செயல்பாடுகளின் அடுத்த கட்டமாக இப்போது அதிக விளைச்சல் தரும் பயிர்களோடு வறட்சியைத் தாங்கி வளர்ந்து மகசூல் தரக்கூடிய பயிர் வகைகளைக் கண்டு பிடிப் பது காலத்தின் கட்டாயமாகி விட்டது. விதைகளின் மரபணுக்களையும் அதன் தன்மைகளையும் கண்டறிந்து அதனை மரபணுக் கான வங்கியில் சேமித்து வைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. முதலில் கண்டு பிடித்தபின்பும் அடுத்த கட்ட பரிசொதனைக்கு யா ரை நியமித்து பதிவு செய்கிறோமோ அவரைத் தொடரச் செய்யவும் வழி வகை செய்யப்பட்டுள்ளது என்றார். தேசிய பயறுவகை ஆராய்ச்சி மையத்தின் தலைவர் கீதா பேசுகையில், விதைகள் இயற்கை பேரிடர்களால் அழியும் நிலை வந்தால் அடுத்த தலைமுறைக்கு ஆகவேண்டும் என்பதற்காகத்தான் கோயில் குடமுழுக்கின்போது கலசங்களில் விதைகளைச் சேமித்து வைத்தார்கள். இதனால் 10, 20 ஆண்டு வரை சிறுதானியங்களில் முளைப்புத் திறன் இருக்கும். இப்போதும் அந்த நிலையில் இருப்பதால் விவசாயிகளிடம் கோரிக்கை வைக்க வேண்டியிருக்கிறது என்றார்.

நிகழ்ச்சியில் புதியரக விதைகள், நெல்வகைகள், பயறு, துவரை, எள், காளாண், போன்றவற்றைக் கண்டுபிடித்த விவசாயிகளுக்கும் அதிக மகசூல் விளைவித்த விவசாயிகளுக்கும் நூற்றுக்கும் அதி மான வகைகறறளில் நெல் சேமித்து வைத்த விவசாயிக்கும் சிறப்புப் பரிசுகள் வழங்கப்பட்டன. இதில் இருநூறுக்கும் அதிகமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**பயறுவகை பயிர்களில் திரட்சியான மணிகள் பெற நுண்ணூட்ட கரைசல் அவசியம் வேளாண் அதிகாரி விளக்கம்**

சேதுபாவாசத்திரம், : பயறுவகை பயிர்களில் திரட்சியான எடை நிறைந்த மணிகள் பெற நுண்ணூட்ட கரைசல் தெளிப்பது அவசி யம் என்று சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண் அதிகாரிகள் விளக்கம் அளித்துள்ளனர்.

சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் பெரிய சாமி, வேளாண்மை அலுவ லர் மதியரசன் ஆகியோர் வெளியிட்டுள்ள அறிக்கை:

தனி ஒரு மனிதன் உடல் ஆரோக்கியத்திற்காக நாள் ஒன்றுக்கு சராசரியாக 85 கிராம் புரதசத்து எடுத்துக்கொள்ள வேண்டியுள்ளது. இந்த புரதசத்தை பயறுவகை பயிர்கள் மட்டுமே நமக்கு கொடுக்கிறது. உளுந்து, பாசிப்பயறு போன்ற பயிர்களில் 20 முதல் 25 சதம் வரை புரதசத்து கிடைக்கிறது. ஆனால் நமது உற் பத்தி திறன் மிகவும் குறை வாக இருப்பதால் ஒரு மனி தன் நாள் ஒன்றுக்கு 36.5 கிராம் புரதசத்து மட்டுமே எடுத்து கொள்ள முடிகிறது. இக்குறையை போக்கி புரதசத்து நிறைந்த திரட்சியான மணிகளை பெற பயறுவகை பயிர்களில் நுண்ணூட்ட சத்து கரைசல் தெளிப்பது அவசியம். உரம் மற்றும் வளர்ச்சி ஊக்கிகளான 3 கிலோ யூரியா, 780 கிராம் டிஏபி, 525 கிராம் பொட் டாஷ், 420 கிராம் பொட்டாசியம் சல்பேட், 16 கிராம் சக்சினிக் அமிலம், 50 மில்லி டீபால் ஆகியவற்றை 100 லிட்டர் தண்ணீரில் கரைக்க வேண் டும். அந்த கரைசலை ஒரு ஏக்கர் பரப்பில் பயறு வகை பயிர்களில் கைத்தெளிப் பான் கொண்டு தெளி க்க வேண்டும்.

இவ்வாறு தெளிப்பதால் பயிர்களுக்கு தேவையான ஊட்டச்சத்து கிடைப்பதுடன் மகசூலும் அதிகரித்து எடைகள் நிறை ந்த திரட்சியான மணிகள் கிடைக்கிறது.

## இரண்டு கிராமங்களில் மட்டும் ஆய்வு வறட்சி நிவாரண குழு மீது விவசாயிகள் அதிருப்தி

திருமங்கலம், : மதுரை மாவட்டத்தில் இரண்டு கிராமங்களில் மட்டும், பயிர் பாதிப்புகளை வறட்சி நிவாரண குழு ஆய்வு செய்து விட்டு புறப்பட்டதால், விவசாயிகளிடையே அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

நிதியமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தலைமையிலான வறட்சி நிவாரண குழு நேற்று மதுரை மாவட்டம் கள்ளிக்குடி, டி.கல்லுப்பட்டி ஒன்றியங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டது. திருமங்கலம் அருகே உள்ள மையிட்டான்பட்டியில் பருத்தி சாகுபடி செய்துள்ள விவசாயிகளை சந்தித்த குழு வினர், விவசாயிகளி டம் பாதிப்பு குறித்து கேட்டறிந்தனர். காய்ந்து போன பயிர்களை விவசாயிகள் ஆய்வு குழுவினரிடம் காட் டினர். மானவாரி சாகுபடி பகுதிகளை மட்டும் ஆய்வு குழுவினர் பார்வையிட்டு சென்றது விவசாயிகளிடம் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது. மையிட்டான்பட்டி விவசாயி சரஸ்வதி கூறுகை யில், எனக்கு சொந்தமான 7ஏக்கரில் நெல் மற்றும் பருத்தி பயிரிட்டேன். மழை இல்லாததால் வட்டிக்கு வாங்கியும், நகைகளை அடமானம் வைத்தும் செலவழித்தேன். ஆனால் பயிர்களை காக்க முடியவில்லை. பாதிக்கப்பட்ட நெல் வயல்கள் அனைத்தும் ஊருக்குள் கண்மாய் கரையில் உள்ளன. ஆனால் ஊருக்குள் வராமல், மேம்போக்காக பார்வையிட்டு சென்றுள்ளனர். வறட்சி நிவாரண குழு வருவது கூட பெரும்பாலான விவசாயிகளுக்கு தெரியாது, என்றார். விவசாயி முத்துகண் ணன் கூறுகையில், சோளம், பருத்தி போன்றவற்றை பயிர் செய்துள்ளோம். வறட்சியால் கடும் பாதிப்பு அடைந்துள்ளோம். இரண்டு கிராமங்களில் மட்டும் ஆய்வு செய்துள்ளனர். எங்கள் பகுதியிலும் ஆய்வு செய்து அரசு உரிய நிவாரணம் வழங்க வேண் டும், என்றார்.

மார்க்சிஸ்ட் மாவட்ட செயலாளர் ராமகிருஷ்ணன் கூறுகையில், அறிவித்தது ஒன்று, நடைமுறை படுத்துவது ஒன்றாக உள்ளது. ஒரே நாளில் நெல்லை, தூத்துக்குடி, விருதுநகர், மதுரை என இத்தனை மாவட்டங்களில் வறட்சியை எப்படி ஒரே குழுவினர் ஆய்வு செய்ய முடியும். மதுரை மாவட்டத்தில் மையிட்டான்பட்டி மற்றும் காடனேரி ஆகிய இரண்டு கிராமங்களை மட்டுமே குழுவினர் பார்வையிட்டுள்ளனர். பிற பகுதி வறட்சியை எப்படி கணக்கிட முடியும். எனவே அனைத்து பகுதிகளிலும் வறட்சியை நிவாரண குழுவினர் முழுமையாக பார்வையிட்டு அரசிடம் கூறவேண்டும், என்றார்.

ஆய்வுக்கூட்டம்

கலெக்டர் அலுவலகத்தில் நிதியமைச்சர் பன்னீர்செல்வம் தலைமையில் அமைச்சர்கள், அரசு உயர் அலுவலர்கள் அடங்கிய உயர்மட்ட குழுவினர் விவசாயிகளுடன் ஆய்வு நடத்தி குறைகளை கேட்டறிந்தனர். கூட்டத்தில் நிதியமைச் சர் பேசுகையில், பருவமழை பொய்த்து போனதால்

விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்படுகின்ற சூழ் நிலை உருவாகி உள்ளது. தமிழகத்தில் இயற்கை இடர்பாடுகளை எதிர்த்து நின்று போராடி பொதுமக்களுக்கு தேவையான நிவா ரண உதவிகளை முதல்வர் வழங்கி வருகிறார், என்றார். கலெக்டர் அன்சுல்மிஸ்ரா பேசுகையில், மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் 39 சதவீதம் மழை குறைவாக பெய்துள்ளது. சாகுபடி செய்யப்பட்ட பரப்பிலும் சரிவர விளைச்சல் இல்லாமல் சராசரியாக 47 சதவீதம் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் 75 ஆயிரத்து 81 விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் போதிய நிவாரணத்தினை முதல்வரிடம் இருந்து பெற்றுத்தருமாறு ஆய்வுக்குழுவிடம் கேட்டு கொள்ளப்பட்டுள்ளது, என்றார்.

அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம்

அண்ணாத்துரை எம்எல்ஏ வலியுறுத்தல்

அண்ணாத்துரை எம்எல்ஏ கூறுகையில், முதலமைச்சர் சட்டமன்றத்தில் தெரிவித்தபடி வறட்சி நிவாரண குழுவினர் மதுரை மாவட்டத்தில் ஆய்வு நடத்தினர். மாவட்டத்தில் 39 ஆயிரம் ஹெக்டேரில் நெல் பயிரிடப்படுவது வழக்கம். ஆனால் இந்தாண்டு போதிய மழை இல்லாததால் 13ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் மட்டுமே நெல் பயிரிடப்பட்டுள்ளது. இதில் 11 ஆயிரம் ஹெக்டேர் அளவிற்கு நெல் விவசாயிகளுக்கு பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. இதே போல் கரும்பு, பருத்தி மற்றும் மானவாரி பயிர்களை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே பாதிக்கப்பட்டுள்ள அனைத்து விவசாயிகளுக்கும் கூடுதல் நிவாரணம் வழங்க வேண்டும். வறட்சியால் வேலை இழந்துள்ள விவசாய தொழிலாளர்களுக்கு ரூ.10ஆயிரம் நிவாரணம் அளிக்க வேண்டும் என வறட்சி நிவாரணக்குழுவிடம் மார்க்சிஸ்ட் சார்பில் மனு கொடுத்துள்ளோம், என்றார்.

கரும்பை பார்வையிடவில்லை

விவசாய சங்கம் குற்றச்சாட்டு

விவசாய சங்க தலைவர் பழனிசாமி கூறியதாவது:

மதுரை மாவட்டத்தில் நெல் மற்றும் பருத்தி விவசாய பாதிப்புகளை மட்டுமே நிவாரண குழுவினர் பார்வையிட்டுள்ளனர். கரும்பு வயல்களை வறட்சி நிவாரண குழுவினர் பார்வையிடாமல் சென்று விட்டனர். மதுரை மாவட்டத்தில் 11ஆயிரம் ஹெக்டேரில் கரும்பு பயிரிடப்பட்டுள்ளது. கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால், கரும்பு விவசாயிகளுக்கும் நிவாரணமாக ரூ.40ஆயிரம் வழங்க வேண்டும். இதனை வலியுறுத்தி 22ம் தேதி மதுரை கலெக்டர் அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இவ்வாறு அவர் பேசினார்.